# 7th ANNUAL RESEARCH SESSION 2025

# ABSTRACTS

**பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்:**
**கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்**

**Cultural Resilience and Sustainable Future:**
**Arts, Innovation and Social Transformation**

Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka.

# பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்:
## கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்

# Cultural Resilience and Sustainable Future:
## Arts, Innovation and Social Transformation

# 7th ANNUAL RESEARCH SESSION
# 2025

**Faculty of Arts and Culture**
**Eastern University, Sri Lanka.**

**Title** : Cultural Resilience and Sustainable Future :
Arts, Innovation and Social Transformation

**Editorial Board**
**Chief Editor** : Mr.Paskaran Suman
**Co-editors** : Mr.V.Alagaretnam
Mrs. Vijitha Thivakaran
Mr.M.L. Mohammed Helfan
Mrs. D.Vithukshana

**Edition** : 2025
**Published by** : Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
**ISBN** : 978-624-5731-53-4

# 7th Annual Research Session-2025
# (ARS – 2025)

## Organizing committee

| | | |
|---|---|---|
| **Chairman** | : | Dr.V.Gunapalasingam |
| **Coordinator** | : | Dr.N.Vaman |
| **Secretary** | : | Mrs.G.Luxmykanthan |
| **Treasurer** | : | Mr.A.Kanneraj |

| | | |
|---|---|---|
| **Advisory Board** | : | Prof. V. Gunaretnam |
| | | Prof. T. Krishnamohan |
| | | Prof. V. Inpamohan |
| | | Prof. S. Santhirasegaram |
| | | Prof. J. Kennedy |
| | | Prof. S. Jeyasankar |
| | | Prof. K. Rajendram |
| | | Prof. K. Suresh |
| | | Prof. P.M. Hamthoon |
| | | Prof. S. Jeganathan |



# Message from the Vice Chancellor

**Prof. P. Peratheepan**
Vice-Chancellor
Eastern University, Sri Lanka.

It gives me great pleasure to extend my heartfelt congratulations and warmest welcome to all participants of the 7th Annual Research Session (ARS - 2025), organized by the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka. The theme of the ARS – 2025, "Cultural Resilience and Sustainable Future: Arts, Innovation, and Social Transformation," reflects the deep commitment of the faculty in addressing global challenges through culturally grounded, innovative, and interdisciplinary scholarship.

In an era marked by rapidly Changing world spurred by climate crises, digital revolutions, and socio-political upheavals—the importance of cultural resilience cannot be overstated. Our histories, traditions, and artistic expressions preserve collective memory and serve as powerful tools for adaptation, healing, and sustainable transformation. This ARS provides a timely platform to critically explore how the arts, in all their diverse forms, intersect with innovation and social justice to shape a more inclusive and resilient future.

The Faculty of Arts and Culture has consistently championed the value of interdisciplinary research and community engagement. The 7th Annual Research Session furthers this tradition by inviting dialogue among academics, artists, policymakers, and practitioners. It fosters the exploration of indigenous knowledge systems, creative industries, and digital innovation as drivers of sustainable development and cultural vitality.

I am confident that the scholarly papers and discussions emerging from this session will generate meaningful insights and policy recommendations that enrich our national development discourse. Moreover, it will strengthen networks across disciplines and institutions, catalyzing future collaborations that bridge the gap between tradition and modernity.

I extend my sincere appreciation to the Dean, conference coordinator, organizing committee, keynote speakers, presenters, and all contributors whose dedication has brought this important academic event to fruition. Let this research session inspire new thinking and reaffirm our collective responsibility to build a world that honours cultural heritage while embracing innovation for the benefit of generations to come.

I wish you all a productive, thought-provoking, and inspiring Session.



# பீடாதிபதியின் செய்தி

**கலாநிதி வ.குணபாலசிங்கம்**
**பீடாதிபதி, கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கற்றல் – கற்பித்தற் செயன்முறைகளும் ஆய்வுச் செயற்பாடுகளும் பல்கலைக்கழக நிறுவனத்தின் இரு பிரதான முன்னெடுப்புகளாகும். இந்த இரு முன்னெடுப்புகளையும் கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வினைத்திறனுடன் மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு வெளிப்பாடாக அமைவதே "வருடாந்த ஆய்வு அமர்வு" எனும் தலைப்பில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் ஆய்வு மாநாடு ஆகும். அந்தவகையில், தொடர்ச்சியாக ஆறு மாநாடுகளைக் கலைப்பீடம் நடத்தியுள்ளது. இவ்வருடம் ஏழாவது ஆய்வு மாநாடு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகின்றது. மேற்படி தொனிப்பொருளுடன் தொடர்புடைய பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் இம்மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. அக்கட்டுரைகளைத் தாங்கிய மாநாட்டு ஆய்வு மலர் ஒன்று வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. அத்தகைய மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

பாடசாலைக் கலைத்திட்டத்தில் இருந்தும் கற்றல் – கற்பித்தற் செயன்முறைகளில் இருந்தும் பல்கலைக்கழகக் கலைத்திட்டமும் கற்றல் – கற்பித்தற் செயன்முறைகளும் வேறுபட்டன. கோட்பாட்டுக் கல்வி - பகுப்பாய்வு - பயிற்சி - கண்டுபிடிப்புகள் - புத்தாக்கம் எனத் தொடரோட்டத்தைக் கொண்டனவாகவே பல்கலைக்கழகக் கற்றல் – கற்பித்தற் செயன்முறைகளும் கலைத்திட்டமும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்தச் செயன்முறையின் வெற்றியைப் பரிசீலனை செய்யும் ஒரு களமாகவும் இவ் ஆய்வு மாநாடு விளங்குகிறது. இம்மாநாட்டில் தமது ஆய்வுகளை முன்வைப்போரிற் பலர், தமது பட்டப்படிப்பை முடித்து அண்மையில் வெளியேறிய மாணவர்கள். தாம் மேற்கொண்ட ஆய்வின் சில முடிவுகளை மாநாட்டில் முன்வைக்கவுள்ளனர். இவர்களை இளம் ஆய்வாளர்கள் என அடையாளப்படுத்தலாம். எமது சமூகத்திற்கு நாம் வழங்கியுள்ள புதிய ஆராய்ச்சியாளர்கள் இவர்கள். இந்தக் களத்தை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் அவர்கள் செயலாற்ற வேண்டும் என்பது எமது பெரு விருப்பு.

இன்றைய உலகமயமாதல் சூழலில் "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருள் குறித்து ஆராயவும் விவாதிக்கவும் கலந்துரையாடவும் வேண்டிய தேவை உள்ளது. அதற்கான களத்தை எமது பீடம் இம்மாநாட்டின் வாயிலாக உருவாக்கியுள்ளமை பாராட்டத்தக்கது. ஆய்வாளர்களது ஆய்வளிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு பண்பாட்டு மீட்சி குறித்தும் பேண்தகு எதிர்காலம் குறித்தும் ஆக்கபூர்வமான விவாதங்கள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அவ்விவாதங்கள் புதிய உத்திகள், சிறந்த நடைமுறைகள், புதிய வாய்ப்புகள்

முதலானவற்றை அடையாளம் காண்பதாக அமைய வேண்டும். 'தமிழ்ப் பண்பாடு: இருப்பும் சவால்களும்' என்ற தலைப்பில் இடம்பெறவிருக்கும் இம்மாநாட்டின் ஆதார சுருதியுரை, தமிழ்ப் பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அத்தகைய விவாதத்தையே முன்னெடுக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக, இந்த மாநாட்டைச் சாத்தியமாக்கிய ஒருங்கிணைப்பாளர், மாநாட்டுக் குழுவினர், ஆதார சுருதியுரையை நிகழ்த்துபவர், ஆய்வுகளை அளிக்கை செய்யும் ஆய்வாளர்கள், பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், பதிவாளர், நிதியாளர், பராமரிப்புப் பிரிவினர், கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள். அவ்வாறே, ஆய்வுக் கட்டுரைகளை மிகச் சிறந்த முறையிலும் குறிப்பிட்ட கால அளவிற் குள்ளும் மதிப்பிட்டு வழங்கிய மதிப்பீட்டாளர்களுக்கும் எனது நன்றிகள். அத்துடன் அனைத்து வழிகளிலும் உதவிய கலை கலாசார பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் ஆகியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஒட்டுமொத்தத்தில், ஏழாவது வருடாந்த ஆய்வு அமர்வு சிறப்புற நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.



# ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி

**கலாநிதி நா.வாமன்**
**இணைப்பாளர், ஏழாவது ஆய்வு மாநாடு,**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடம் வளர்ந்துவரும் இளம் ஆய்வாளர்களுக்கான ஆய்வுக் களத்தை வழங்குவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு வருடம் தோறும் ஆய்வு மாநாட்டை ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றது. அந்த வகையில், இவ்வருடம் ஏழாவது வருடாந்த ஆய்வு மாநாடு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர் காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் பொருண்மையில் இடம்பெறுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

ஆய்வு என்பது அறிவுப் பரம்பலில் முக்கியமானதொரு இடத்தைப் பெறுகின்றது. ஆய்வுகளின் மூலமாக வெளிப்படும் புதிய அறிவுத் தேட்டம் சமூகத்தினை காலத்திற்குக் காலம் வலுப்படுத்துகின்றது; வளப்படுத்துகின்றது. ஆய்வுகள் பல்வேறு தேவைகளுக்காக மேற்கொள்ளப்பட்டாலும் ஆய்வுகளின் அடிப்படை கண்டுபிடிப்புக்களாகும். ஒவ்வொரு ஆய்வாளனும் தான் மேற்கொள்ளும் ஆய்வின் மூலம் உலகிற்கும் அவனைச் சார்ந்த சமூகத்திற்கும் பயனுடைய ஆய்வு முடிவுகளை வழங்குவான். இந்த ஆய்வுகள் உலகைச் சரியான திசையில் வழிப்படுத்துமாயின், அவை உலக மாந்தருக்குப் பயனுடைய ஆய்வுகளாகக் கொள்ளப்படுகின்றன. அந்த வகையில், இவ்வருடம் ஆய்வு மாநாட்டில் இடம்பெறும் ஆய்வுக் கட்டுரைகளும் அத்தகைய நோக்கத்தினை நிறைவேற்றுபவையாக அமையும் என்று நம்புகின்றேன். இவ்வருடம் 66 ஆய்வுக் கட்டுரைகள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. அவற்றுள் 57 ஆய்வுக் கட்டுரைகள் மதிப்பீட்டாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் 50 ஆய்வுக் கட்டுரைகளே குறித்த ஆய்வாளர்களால் பதிவுசெய்யப்பெற்று நூலாக்கம் பெறுகின்றது.

இந்த ஆய்வு மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு அனுமதியையும் ஆதரவையும் வழங்கிய உபவேந்தர் பேராசிரியர் ப.பிரதீபன் அவர்களுக்கு எனது முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்து, இந்த மாநாடு சிறப்பாக அமைவதற்குத் தனது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் அனுசரணையாளர்களைப் பெற்றுக்கொள்வதற்கும் உதவிய கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி கலாநிதி வ.குணபாலசிங்கம் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். மேலும், ஆய்வு ஒழுங்கமைப்புகளுக்குப் பக்கபலமாக இருந்து செயற்பட்டு ஆலோசனைகளை வழங்கிய ஆலோசனைச் சபையினருக்கும் கட்டுரைகளை உரிய வேளைக்கு மதிப்பீடு செய்து தந்த மதிப்பீட்டாளர்களுக்கும் நன்றிகளை உரித்தாக்குகின்றேன். இம்மாநாட்டிற்குக் காத்திரமான பங்களிப்பை வழங்கிய மாநாட்டின் செயலாளர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன் அவர்களுக்கும் பொருளாளர் அ.கன்னேராஜ் அவர்களுக்கும் பதிப்பாசிரியர் பாஸ்கரன் சுமன் அவர்களுக்கும் ஒழுங்கமைப்புக் குழுவினருக்கும் உளம் கனிந்த நன்றிகள்.

இம்மாநாடு நடைபெறுவதற்குப் பங்களித்த எமது பல்கலைக்கழக பதிவாளர் அ. பகீரதன், நிதியாளர் எம். எம். பாரிஸ், எமது பீடத்தின் பிரதிப் பதிவாளர் திருமதி மும்தாஜ் சமீம், உதவி நிதியாளர் எஸ். பிரமாகரன் ஆகியோருக்கும் கட்டுரை ஆசிரியர்கள், கலை கலாசார பீட விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, இம்மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கு நிதி அனுசரணை வழங்கிய மட்டக்களப்பு Brandix நிறுவனத்தினருக்கும் இலங்கை வங்கி (கிழக்குப் பல்கலைக்கழகக் கிளை) பிராந்திய முகாமையாளருக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள். இந்த ஆய்வு மாநாட்டுக்குச் சகல வழிகளிலும் உதவிகளையும் ஒத்தாசைகளையும் நல்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



# ஆதார சுருதியுரையின் சுருக்கம்

**பேராசிரியர் கி.விசாகரூபன்**
சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை,
கலைப் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**தமிழ்ப் பண்பாடு : இருப்பும் சவால்களும்**

உலகில் உள்ள ஒவ்வொரு இனமும் தனக்கெனத் தனித்துவமான ஒரு பண்பாட்டைக் கொண்டுள்ளது. இந்தப் பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளே அந்தந்த இனங்களின் தனித்துவமான அடையாளங்களாகவும் விளங்குகின்றன. இந்தப் பண்பாட்டுக் கூறுகளை அவற்றின் மரபு மாறாமல் கையளிப்பதிலும் காத்துக்கொள்வதிலும் இனங்கள் ஒவ்வொன்றும் மிகுந்த கரிசனை கொண்டவையாகக் காணப்படுகின்றன. தமிழ் இனமும் தனக்கெனத் தனித்துவமான ஒரு பண்பாட்டைக் கொண்டுள்ளது. இப்பண்பாட்டில் உள்ளடங்கும் செழுமையான பண்பாட்டுக் கூறுகள் பலவற்றை இவ்வினம் தலைமுறை தலைமுறையாக பேணிக்காத்தும் கையளித்தும் வருகின்றது. ஆயினும், இப்பண்பாட்டுத் தொடர்ச்சியைப் பேணுவதில் உலகில் உள்ள பல்வேறு இனங்களும் எதிர்கொள்கின்ற சவால்களைப் போலவே தமிழினமும் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழல் ஒன்று இன்று உருவாகியுள்ளது. இவ்வாறான சவால்களை இனங்காண்பதும் அவற்றை எதிர்கொள்வதற்கான உபாயங்களை முன்வைப்பதும் இந்த ஆதார சுருதியுரையின் பிரதான நோக்கங்களாக அமைகின்றன. சுதேசியப் பண்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமையும் உலகமயமாதல் (Globalization) சூழலைப் பொருத்தமுறக் கையாளாவிட்டால் எமது பண்பாட்டு அடையாளங்களை (Cultural Identity) அடுத்த தலைமுறையினருக்குக் கையளிப்பதில் முன் எப்போதுமில்லாத ஒரு நெருக்குவாரத்தை எமது இனம் எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

ஒற்றைப் பண்பாட்டை நோக்கிய மௌனமான அசைவு என்பது எமது இருப்புக்குப் பெரும் சவாலாக அமையும். பண்பாட்டைப் பேணிக் கையளிப்பதில் பல்வேறு சவால்களை எம்மால் இனங்காண முடிகிறது. உலகமயமாதல், கையளிப்புக் குறைபாடு, கையளிப்பு ஊடகக் குறைபாடு, பண்பாடு சார்ந்த சிலவகை வழக்காறுகளைப் படைப்போரின் தாழ்வுணர்ச்சி, வழக்காற்றுப் பயில்வுகள் சிலவற்றின் குறுகிய வட்டம், திறந்த பொருளாதாரச் சூழலில் நவீன உற்பத்திச் சாதனங்களுடனும் அவற்றின் விளைபொருட்களுடனும் போட்டி போட முடியாத தன்மை, உற்பத்திச் செயற்பாடுகளில் நவீன கருவிகளின் வருகை, பண்பாட்டு வினையாளர்களின் புலப்பெயர்வு, மதமாற்ற முயற்சிகள், சாஸ்திரியக் கலைகளின் மீதான மிகை விருப்பு, பாடசாலை மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் பாடவிதானம், புலமைச் சிரத்தை ஈடுபாடின்மை, பழைமை போற்றாத பண்பு முதலானவை இவ்வகை அச்சுறுத்தல்களின் பதச்சோற்றுப் பருக்கைகளாகும். இவ்வாறான சவால்களை எவ்வாறு கையாள்வது, அந்தக் கையாள்கையினூடே எமது பண்பாட்டு அடையாளங்களை எவ்வாறு தக்கவைப்பது,

அவற்றை அடுத்த தலைமுறைக்கு எவ்வாறு கையளிப்பது என்பன தொடர்பான ஓர் உசாவலை இந்த ஆதார சுருதியுரை மேற்கொள்கிறது. களப்பணியினூடே திரட்டிக்கொள்ளப்பட்ட தரவுகள் இங்கு விபரண ஆய்வு முறையியலுக்கூடாக ஆய்வுக்குட்படுத்தப்படவுள்ளன. பொருத்தமான பொறிமுறையின் வழி, இருக்கின்ற பண்பாட்டு மரபுகளைக் காப்பாற்றிக் கொள்வதுடன் வழக்கிறந்து போன பண்பாட்டு மரபுகளை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டியதன் அவசியத்தையும் இந்த ஆதார சுருதியுரை அழுத்திப் பேசும்.



# பிரதம பதிப்பாசிரியரின் செய்தி

**பாஸ்கரன் சுமன்**
**பதிப்பாசிரியர், ஏழாவது ஆய்வு மாநாடு,**
**கலை கலாசார பீடம்,**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடம் வருடாந்தம் ஆய்வு அமர்வு (Annual Research Session – ARS) ஒன்றை நடத்தி வருகிறது. இந்த ஆண்டு ஏழாவது ஆய்வு அமர்வு "பண்பாட்டு மீட்சியும் பேண்தகு எதிர்காலமும்: கலை, புத்தாக்கம், சமூக மாற்றம்" எனும் தொனிப்பொருளில் இடம்பெறுகிறது. இன்று நாம் பலவிதமான உலகளாவிய சவால்களுக்கு முகம்கொடுக்கும் சூழலில், கலை கலாசார பீடத்தினர் பண்பாட்டு மீட்சி, அதனூடான பேண்தகு எதிர்காலம் என்பனவற்றுக்கான வழிகள், செயற்றிட்டங்கள் முதலானவை குறித்த ஆய்வுவழிப்பட்ட விவாவதங்களுக்கான களமாக இவ் ஆய்வு அமர்வை ஒழுங்கமைத்துள்ளனர். அவ்வகையில், பல்கலைக்கழக நிறுவனம் அறிவார்ந்த தளத்தில் நின்று சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியின் ஒரு பகுதியை இம்மாநாட்டின் மூலம் நிறைவேற்றியுள்ளது.

இந்த ஆய்வு அமர்வில் ஐம்பது ஆய்வுக் கட்டுரைகள் அளிக்கை செய்யப் படவுள்ளன. அவை மொழி, கலை, இலக்கியம், தமிழர் கல்வி, வரலாறு முதலான துறைகள் சார்ந்த அறிவுத் தேட்டங்களாக அமைகின்றன. அக்கட்டுரைகளை மையப் படுத்திய விவாதங்களும் கலந்துரையாடல்களும் பண்பாட்டு மீட்சிக்கான வரைபுகளை முன்வைப்பதாக அமைய வேண்டும் என விரும்புகின்றோம். இவ் ஆய்வு அமர்வில் தமது ஆய்வுக் கட்டுரைகளை முன்வைப்போரிற் பலர், அண்மையில் பல்கலைக்கழகக் கல்வியை முடித்து வெளியேறியவர்கள். ஆதலால், இவர்கள் ஆய்வுலகிற்குப் புதுவரவுகளாகின்றனர். அவர்களது ஆய்வு அளிக்கைகளை மையப்படுத்தி நிகழும் கலந்துரையாடல்களும் விவாதங்களும் அவர்களது ஆய்வறிவினைக் கூர்மைப்படுத்தி, அவர்களைச் சிறந்த ஆய்வாளர்களாக மிளரச் செய்யும் என்பது திண்ணம். அந்தவகையில் நோக்கினால், ஆய்வுலகிற்குப் புதுவரவுகளை நல்கும் பணியையையும் இவ் அமர்வு முன்னெடுத்துள்ளது எனலாம்.

இந்த ஆய்வு அமர்வுக்காக ஆய்வாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரைகள் துறைசார் ஆளுமைகளால் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டன. மதிப்பீட்டாளர்களால் விதந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப் பட்டு ஆய்வுக்கட்டுரைகள் மீளவும் எம்மிடம் கையளிக்கப் பட்டன. அவ் ஆய்வுக்கட்டுரை களின் சுருக்கங்கள் (AbstractS) இங்கு நூலாகத் தொகுத்து வழங்கப்படுகிறது. இத்தருணத்தில், இந்நூலாக்கத்தோடு பங்குகொண்டு உழைத்த அனைவருக்கும் பதிப்பாசிரியர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவ்வகையில், நூலாக்கப் பணி குறித்துத் தமது ஆலோசனைகளை வழங்கிய கலை கலாசார பீடப் பீடாதிபதி வ. குணபாலசிங்கம் அவர்களுக்கும் ஆலோசனைச் சபையினருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்

கொள்கிறேன். அத்தோடு, தமது அறிவார்ந்த பங்களிப்பினை ஆய்வின் வழியாக வழங்க முன்வந்த ஆய்வாளர்களுக்கும், ஆய்வுக் கட்டுரைகளைச் சிறப்பான முறையில் மதிப்பீடு செய்து வழங்கிய துறைசார் ஆளுமைகளுக்கும் எமது நன்றி உரித்துடையது. மேலும், ஆய்வுக் கட்டுரைகளைப் பெறுதல் தொடக்கம் நூலாக்கப் பணி வரையிலும் உடனுழைத்த ஏழாவது ஆய்வு அமர்வின் இணைப்பாளர் நா.வாமன், செயலாளர் திருமதி கௌரி லக்சுமிகாந்தன், பொருளாளர் அ.கன்னேராஜ் அவர்களுக்கும் ஒழுங்கமைப்புக் குழுவினருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நூற்பதிப்புக் குழுவினர் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பானது சிறந்த முறையில் வெளிவர வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாய் நின்று செயற்பட்டார்கள். அவர்களது தக்க துணை இன்றேல், இந்நூலாக்கப்பணி சாத்தியமாகியிருக்க முடியாது. அவர்களுக்குப் பதிப்பாசிரியர் என்ற வகையில் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நூலின் அச்சாக்கத்திற்கான நிதி அனுசரணையை வழங்கிய பாமதீசன் கோபாலப்பிள்ளை அவர்களுக்கும் எமது நன்றி உரித்துடையது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, என்மீது நம்பிக்கை கொண்டு இப்பாரிய பொறுப்பினை ஒப்படைத்த கலை கலாசார பீட அவைக்கும் எனது நன்றி உரித்துடையது. இறுதியாக, இந்த ஆய்வு அமர்வின் வெற்றியில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எனது நன்றிகள்.

# உள்ளடக்கம்

Message from the Vice Chancellor
பீடாதிபதியின் செய்தி
ஆய்வு மாநாட்டு இணைப்பாளரின் செய்தி
ஆதார சுருதியுரையின் சுருக்கம்
பிரதம பதிப்பாசிரியரின் செய்தி

**Environment and Geography**

1. நன்னீர் மீன்பிடி வளவாய்ப்புகளும் சவால்களும்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு
**Pavatharani Suntharalingam**
2. வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகள்: வெருகல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு
**Thurainayagam Pratheepan, V. Pathmanandakumar**
3. அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்
**Nafeel Naafiya, V. Pathmanandakumar**
4. அநுராதபுர மாவட்ட கெகிராவ பிரதேச செயலகப் பிரிவின் நெற்செய்கைப் போக்குகள்
**Rasik Fathima Rasna, V. Pathmanandakumar**
5. மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025)
**Saminathan Mangala**
6. முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டம்: மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு
**Imam Fathima Ishama, V. Pathmanandakumar**
7. மாத்தளை நகரின் கடந்த இரு தசாப்த கால (2004-2024) நிலப் பயன்பாட்டு மாற்றம்
**Rajendran Pavithra, S. Vasanthakumary**
8. நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாய்வுநிலங்களின் நிலப்பயன்பாட்டினை முகாமைசெய்தல்: நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள்
**Vijayakumar Vinothani, S. Vasanthakumary**
9. கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே பிரதேச செயலக பிரிவில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றம்
**Yoganadhan Baby Shalini, S. Vasanthakumary**
10. அனுராதபுர மாவட்டம் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் விவசாய நடவடிக்கைகள் மீதான காட்டு விலங்குகளின் தாக்கம்
**Mohammadhu Ansar Aroosiya, V. Pathmanandakumar**

## Political Science & Governance

11. கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் சவால்களும்: திகாமடுல்ல மாவட்டத்தின் 2020, 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு
**Puspakaran Dilasan, V. Gunaretnam**

12. பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு: 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
**P. Ajitha, A.Kanneraj**

13. பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாக்காளர் நடத்தை: 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு
**Thevarajah Kinsiya Miyomi , N.Pushparajah**

14. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகம்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு
**Rajanitharan Thushanthani, A.Kanneraj**

15. இலங்கையில் ஜனநாயக முறைமையைப் பாதுகாத்தல்: ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆய்வு
**Chandramani Jeyanthi**

## Language and Literature

16. அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதில் உள்ள சவால்கள்: பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) மற்றும் அரபு-தமிழ் ஒலி ஒப்பீடுகளைப் பயன்படுத்திய விளக்க ஆய்வு
**Habeebul Buhary Razeen Riza, I. M. Thalib**

17. அகநானூற்றுச் செய்யுட்கள் சுட்டும் பண்பாட்டுப் பதிவுகள்
**Tharumarasa Jansika**

18. பண்பாட்டுத் தேசிய நோக்கில் பாரதி படைத்த பெண்
**Sivanesh Ranjidha**

19. திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு
**Balarathnam Saranya**

20. சமூகவியல் நோக்கில் ‘கடவுளரும் மனிதரும்’ சிறுகதைத் தொகுப்பு
**N. Remsika**

21. மு.தயாளன் நாவல்கள் காட்டும் ஈழத்து யுத்த கால வாழ்வியல் சூழல்
**Mahendran Kovarththana, Dr. Nadira Mariyasandanam**

22. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு
    **Alagaraj Abdha Nishan**
23. சிறுவர் உரிமை விழிப்புணர்வில் இலக்கியங்களின் பங்களிப்பு : 'எனக்கு வயது பதின்மூன்று' சிறுகதையை முன்னிறுத்திய பார்வை
    **K.Lohageetha**

## Drama and Theater

24. சடங்காற்றுகையில் சுவை, நறுமணம் மற்றும் தொடுதலின் வகிபங்கு: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு
    **K.Atputhan**
25. குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் இலக்கியச் செல்வாக்கு
    **Suthakaran Suvistan**
26. தலித்திய நோக்கில் கந்தன் கருணை
    **K.Nilaxsan**

## History and Culture

27. பட்டிப்பளைப் பிரதேச விவசாயப் பண்பாட்டில் போடிமாரின் வகிபங்கு
    **Vijayareththinam Dishani**
28. மட்டக்களப்பு கரைவாகுப்பற்று வன்னியர்களும் சமூகமும்
    **Rasanayakam Hariskanth**
29. வன்னிப் பெருநிலப் பரப்பில் தொல்லியல் சின்னங்களில் தமிழர் கலை வெளிப்பாடும் அதன் தாக்கமும்
    **Ramakavundar Thevatharshikan**

## Education & Psychology

30. மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு
    **Niththiyanantham Hakshana**
31. பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை – சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பனவற்றின் செல்வாக்கு
    **Saththiyeswaran Supisankari**
32. பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில்சார் தீய்வைத் தூண்டும் காரணிகள் : யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைநிலைப் பாடசாலைகளின் மீதான ஒரு தோற்றப்பாட்டியல் ஆய்வு
    **Brintha Somalojan, V.Vijayabaskar**

33. கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்
**Shanmugam Jeyanthiny, Rajendran Thakshaayini**

34. க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபங்கு
**K. Shayanthini, R. Thakshaayini**

35. சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு
**Parameswaran Kunalini**

36. ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் பங்களிப்பு
**T. Puviraj, R. Thakshaayini**

37. ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு
**Thujenthan Kalaiksa**

38. விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்
**Abilash.K, Arulmoly.S**

## Religion & Social Harmony

39. நல்லூர் கந்தசுவாமி கோயில் மரபுகளும் மாற்றங்களும்
**Thevaraja Tharsin, Mr. K. Mathiseelan**

40. இந்துமதம் வலியுறுத்தும் குடும்பக் கட்டமைப்பு: மகாபாரதத்தை மையப்படுத்திய ஆய்வு
**P.Thaarani, N.Kunasivarupan**

41. இலாவாணை குமாரர் கோயிலின் வழிபாட்டு மரபுகள் - ஓர் ஆய்வு
**T. Shathursana, V.Gunapalasingam**

42. மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறைகளும்
**Jayavani Krishnamoorthy**

43. ஒழுக்கக் கோட்பாடு - இந்து, பௌத்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு
**Selvarasa Vijitha, R.Sahayaseelan**

44. இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்துசமய இலக்கியப் பங்களிப்புகள்
**Thenila Jegatheeswaran**

45. மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடும் மாதா வழிபாடும் : வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயத்தையும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு
**Anthonystaniskilas Amaliny, R.Sahayaseelan**

46. தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் – ஒரு வரலாற்று நோக்கு
**Thanista Sathyendra**

47. பகிடிவதையும் பாலியல் வன்முறையும் : கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு
**K.Sivavgneshwaralingam Chettiyar**

48. உளவளத்துணைச் செயற்பாடுகளும் ஒழுக்கப் பிரயோகங்களும் – ஓர் ஆய்வு
**T.Nimesha**

49. பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் : கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதிகளினை அடிப்படையாக் கொண்ட ஆய்வு
**Pranaha Thineswaran, Kanthasami Kajavinthan**

50. ஜைனம் கூறும் இல்லறம்சார் ஒழுக்கச் சிந்தனைகள் – ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு
**S. Aneja**

# நன்னீர் மீன்பிடி வளவாய்ப்புகளும் சவால்களும்: ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Pavatharani Suntharalingam**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pavatharanisuntharalingam@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நன்னீர் மீன்பிடி வளவாய்ப்புகளும் சவால்களும் எனும் தலைப்பில் மேற்கொள்ளப் பட்ட இவ் ஆய்வானது, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்கு உட்பட்ட பல பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டது. அப்பிரதேசங்கள் மீன்பிடிக்குச் சாதகமான பல காரணிகளைக் கொண்டுள்ள போதிலும், நன்னீர் மீன்பிடியானது பல சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றது. இவ் ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில் நன்னீர் மீன்பிடிக்குச் சாதகமான காரணங்களையும் நன்னீர் மீன்பிடி எதிர்கொள்ளும் சவால்களை யும் இனம்காணல் எனும் ஆய்வு நோக்கத்தை நிறைவுசெய்யும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, அத்தரவுகள் அளவு ரீதியான மற்றும் பண்பு ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில், இவ்வாய்விற்காக நேரடி அவதானம், குவியக்குழுக் கலந்துரையாடல், வினாக்கொத்து போன்ற முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக அறிக்கை, Open Street Map தரவுகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டன. இவ் ஆய்வின் பெறுபேறுகளாக நன்னீர் மீன்பிடிக்கான குளங்கள் காணப்படுதல், அதிக இலாபம் தரக்கூடிய மீன் இனங்கள் காணப்படுதல், நிரந்தர ஆறுகளைக் கொண்டிருத்தல், உணவுப் பாதுகாப்பிற்கு அவசியமாக அமைதல், வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் வழங்குதல் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று மீன்பிடி எதிர்நோக்குகின்ற சவால்களாக மீன்பிடிக் கலங்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை, மீன்பிடி வலைகளை வருடாந்தம் புதுப்பித்துக் கொள்ள முடியாமை, முதலைகளின் தாக்குதல்கள் அதிகமாகக் காணப்படுதல், பருவகால மாற்றங்கள், நன்னீர் மீன்பிடிக்கான ஏற்றுமதி வாய்ப்புக் குறைவு, களஞ்சியப்படுத்தல் வசதி யின்மை, நீர்த்தாவரங்கள் வளர்தல், அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளும் அதிகப்படியான மீன்பிடி நடவடிக்கை களும், நீர் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுதல், இளம் தலைமுறையினர் மீன்பிடியில் ஈடுபட விரும்பாமை போன்ற பல பிரச்சினைகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் 10000 – 15000 வரையான வருமானத்தைப் பெறுகின்ற மீனவர்களே 37.5% மாகக் காணப்படுகின்றனர். இதன் மூலமாக ஏனைய முதலீடுகளை மேற்கொள்ள முடியாத நிலைமையும் ஏற்படுவது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், ஆய்வுப் பிரதேசத்தில் 40 வயதிலும் கூடிய மீனவர்களே 75% இனை விட அதிகளவில் மீன்பிடியில் ஆர்வம் காட்டுவதும் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** நன்னீர், மீன்பிடி, ஏற்றுமதி, தடைகள், வருமானம்.

# வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகள்: வெருகல் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Thurainayagam Pratheepan[1]**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
piratheepan1017@gmail.com
**V. Pathmanandakumar[2]**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

ஆய்வுப் பிரதேசத்தில் வறுமையைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட பல்வேறு அரச, அரசசாரா நிறுவனங்கள் இருந்த போதிலும், தொடர்ச்சியாக வறுமையை அப்பிரதேசம் அனுபவித்து வருகின்றது. இதனால் இவ்வாய்வானது வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதார காரணிகளைப் பகுப்பாய்வு செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டது. வெருகல் பிரதேசத்தில் வறுமையைத் தீர்மானிக்கும் சமூக பொருளாதாரக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல் ஆய்வின் பிரதான நோக்கமாகும். அசுவெசும திட்டப் பயனாளிகளிடமிருந்து எளிய எழுமாற்று மாதிரி எடுப்பு முறையைப் பயன்படுத்தி 70 மாதிரிகள் தெரிவுசெய்யப்பட்டு வினாக்கொத்து, நேரடி அவதானிப்பு, குவியக்குழுக் கலந்துரையாடல், நேர்காணல் போன்ற முறைகளைப் பயன்படுத்திப் பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகளும், பிரதேச புள்ளிவிவரக் கையேடுகள், சமுர்த்திக் கிளை அறிக்கைகள், மத்திய வங்கி, தொகைமதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்கள அறிக்கைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகளும் ஆய்வில் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளில் உள்ளீடு செய்யப்பட்டு, விவரணப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு, குவியக்குழுக் கலந்துரையாடலில் இருந்து பெறப்பட்ட தரவுகள் கருப்பொருள் பகுப்பாய்வுக்கும் உட்படுத்தப்பட்டன. இப்பிரதேசத்தில் வேலையின்மை, கல்வியின்மை, உட்கட்டமைப்பு விருத்தியின்மை, கடன் வசதிகள் இன்மை, சமூக சமத்துவமின்மை போன்ற காரணிகள் வறுமையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மக்களும் தொடர்ந்து வறுமையில் இருப்பதால் சலுகைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் இப்பிரதேசத்தில் வறுமை தொடர்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதும் இவ்வாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** வறுமை, அசுவெசும, சமுர்த்தி, வாழ்வாதாரம், வெருகல்.

# அறுகம்பேவில் பெண் அலைச்சறுக்கர்கள் எதிர்கொள்ளும் சவால்கள்

**Nafeel Naafiya**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
naafiya97@gmail.com
**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் தென்கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள அறுகம்பேவானது உலகளாவிய ரீதியில் பிரசித்தி பெற்ற அலைச்சறுக்கல் தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. அண்மைக்காலத்தில் அலைச்சறுக்கலில் பெண்களின் பங்கேற்பு அதிகரித்து வந்தாலும், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்த ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த ஆய்வானது அறுகம்பேவில் அலைச்சறுக்கலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை அடையாளங்காணும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வினை மேற்கொள்வதற்கான மாதிரிநுட்ப முறையாக எளிய எழுமாற்று மாதிரி முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. அதற்கு 81 மாதிரிகள் எடுக்கப்பட்டன. அத்துடன் நேர்காணல்கள் அலைச்சறுக்களில் ஈடுபடும் பெண்கள் மற்றும் அலைச்சறுக்கல் பாடசாலைகளை நடத்தக்கூடிய ஆசிரியர்களிடம் மேற்கொள்ளப்பட்டன. வினாக்கொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தரவுகள் SPSS எனும் மென்பொருளின் ஊடாக விவரணப் பகுப்பாய்வு செய்யப்பட்டு அவை ஒழுங்கு முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன. மேலும், நேர்காணல் மேற்கொண்டு அவற்றினை ஒலிப்பதிவு செய்த பின்னர் மீள எழுதி உபபிரிவுகளாகப் பிரித்துத் தரவுகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது அலைச்சறுக்களில் பங்கேற்கும் பெண்கள் கலாசார எதிர்ப்பு, உடல் மற்றும் உளவியல் பாதுகாப்புப் பற்றாக்குறை, பயிற்சிகளுக்கான நிலையான வசதிகள் இல்லாமை, பாலினப் பாகுபாடு போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர் என்பதை உறுதி செய்கின்றது. இதன் அடிப்படையில் பெண் அலைச்சறுக்கர்களின் பங்கேற்பை ஊக்கு விக்கத் தேவையான கொள்கைகள், சமூக விழிப்புணர்வு நடவடிக்கைகள், பாதுகாப்பான சுற்றுச்சூழல்களின் உருவாக்கம் ஆகியன அவசியம் என இவ்வாய்வானது பரிந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** அறுகம்பே, பெண் அலைச்சறுக்கர்கள், அலைச்சறுக்கல் சுற்றுலா, பாலின சவால்கள், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி.

# அநுராதபுர மாவட்ட கெகிராவ பிரதேச செயலகப் பிரிவின் நெற்செய்கைப் போக்குகள்

**Rasik Fathima Rasna**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
mrrasna8574@gmail.com
**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வு, அநுராதபுர மாவட்டத்தின் கெகிராவ பிரதேசத்தின் கடந்த பத்து ஆண்டுகளில் (2015-2024) நெற்செய்கை உற்பத்திப் போக்குகளையும் அவற்றை வடிவமைத்துள்ள சமூக, பொருளாதார மற்றும் தொழில்நுட்பக் காரணிகளையும் ஆராய்கின்றது. இவ்வாய்வில் கெகிராவ பிரதேசத்தின் 10 கிராம சேவகர் பிரிவுகள் தெரிவுசெய்யப்பட்டு எளிய எழுமாற்று மாதிரியெடுப்பு நுட்ப முறையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 100 விவசாயிகளிடம் வினாக்கொத்துக்கள் மற்றும் பனிப்பந்து மாதிரியெடுப்பு நுட்ப முறையில் பெறப்பட்ட தரவுகளும் கெகிராவ கமநல சேவைகள் நிலைய அதிகாரிகள் 05 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் மூலம் பெறப் பட்ட தரவுகளும் முதலாம் நிலை தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. கெகிராவ கமநல சேவைகள் நிலையத்திலிருந்து இரண்டாம்நிலைத் தரவுகள் பெறப்பட்டன. அளவுசார் தரவுகள் SPSS 26 மென்பொருளைப் பயன்படுத்திப் பகுப்பாய்வு செய்யப் பட்டது. இவ்வாய்வின் அடிப்படையில் கெகிராவ பிரதேசத்தில் அதிகளவான நெற்செய்கை நிலப்பரப்புகள் காணப்பட்ட போதிலும், குறைந்தளவான உற்பத்திகளே பெறப்படுகின்றன என்ற முடிவு கிடைக்கப்பெற்றுள்ளது. பெரும்போக மற்றும் சிறுபோகங்களில் உற்பத்தி சீராக அதிகரிக்கிறது. ஆனால், நீண்ட கால நிலையான வளர்ச்சி இல்லாமல் தளம்பல் நிலையைக் காட்டுகிறது. குறிப்பாக, 2019 ஆம் ஆண்டில் உற்பத்தி மிகவும் குறைந்திருந்தது, ஆனால், 2024 ஆம் ஆண்டில் உற்பத்தி அதிகரித்தது. இதன் மூலம், இந்த ஆய்வு குறிப் பிட்ட காலத்தில் கெகிராவ பிரதேசத்தில் உற்பத்தி மாறுபாடுகளையும் அதற்கான காரணி களையும் எடுத்துக்காட்டுகிறது. விவசாயிகள் பெரும்பாலும் பாரம்பரிய முறைகளையே பின்பற்றுகின்றனர். நவீன தொழில்நுட்பங்கள் குறைவாகவே அவர்களால் பயன்படுத்தப் படுகின்றன. இதன் காரணமாக, நெற்செய்கையின் உற்பத்தித்திறன் குறைகிறது. அரச கொள்கை மாற்றங்களும் விவசாயிகளின் நிலையைப் பாதிக்கின்றன. குறுகிய காலத்திற் கேற்ற நவீன நெல்லினங்கள் விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளன. இது மாற்றத்தின் ஓர் ஆரம்பமாகக் கருதப்படலாம். எனினும், முழுமையான செயல்திறன் மேம்பாடு மற்றும் நிலையான உற்பத்தியை அடைய தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் கொள்கை உந்துதல் களும் அவசியமாகின்றன. இந்த ஆய்வு கெகிராவ பிரதேசத்தின் நெற்செய்கையின் தற்போதைய நிலை மற்றும் எதிர்கால அபிவிருத்தி வாய்ப்புகளை வெளிப்படுத்துகிறது. தொழில்நுட்பம், கல்வி, நீர்ப்பாசன வசதி, அரச கொள்கை ஒத்துழைப்பு ஆகியவை ஒருங்கிணைந்த முறையில் செயற்பட வேண்டும் என்பதே இந்த ஆய்வின் முக்கிய பரிந்துரையாகும்.

**திறவுச் சொற்கள் :** கெகிராவ, நெற்செய்கை, உற்பத்திப் போக்கு, பாரம்பரிய விவசாயம், விவசாய தொழில்நுட்பம்.

# மண்முனைப் பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில் பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025)

**Saminathan Mangala**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
saminathanmangala@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென்எருவில்பற்று வரையான கரையோர உருவவியல் மாற்றம் (2006-2025) எனும் தலைப்பிலான இவ்வாய்வானது, ஆய்வுப் பிரதேசத்தின் 2006 தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரையான கரையோர உருவவியல் அம்சங்களை அடையாளப்படுத்துவதோடு, அவற்றின் கால ரீதியான உருவவியல் மற்றங்களைக் கண்டறிவதை நோக்கங்களாகக் கொண்டுள்ளது. குறித்த ஆய்வை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத் தரவுகளாக நேரடி அவதானிப்பு மூலம் பெறப்பட்ட விடயங்களும் குறித்த பிரதேச மக்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் அடிப்படையிலான தகவல்களும் பயன்படுத்தப்பட்டதோடு, Google Earth மென்பொருளானது பிரதான தரவு மூலமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பண்புசார் பகுப்பாய்வும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக குறித்த கரையோரத்தில் ஆண்டு ரீதியாக ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், படமாக்கல் செயன்முறைக்காக Arc GIS 10.4.1 என்னும் மென்பொருளும் பயன்படுத்தப் பட்டுள்ளது. ஆய்வின் பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான கரையோர நிலவுருவங்களாக மணற்கடற்கரை யோரம், தோணா, கஸ்ப் என்பன அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. இவ் உருவவியல் அம்சங்கள் கடல் மற்றும் ஆறுசார் செயன்முறையினால் விருத்தியடைந்துள்ள உருவவியல் அம்சங்களாகும். இவ் உருவவியல் அம்சங்கள் பரப்பு ரீதியாகக் கணிக்கப்பட்டுள்ளன. இதன்படி குறித்த கரையோரத்தின் பிரதான உருவவியல் அம்சமாக கரையோரம் முழுவதிலும் சிறப்பாக விருத்தியடைந்துள்ள மணற்கரையோரம் காணப்படுகின்றது. இவற்றுடன் கால ரீதியாக விருத்தியடைகின்ற கஸ்ப் மற்றும் தோணாக்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான கரையோர நிலவுருவங்கள் மூன்று காணப்படுகின்றமையை ஆய்வின் பெறுபேறுகளின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. மண்முனைப்பற்றுத் தொடக்கம் மண்முனை தென் எருவில்பற்று வரையான கரையோரத்தில் பிரதானமாக மணற்கடற்கரையோரம் மற்றும் கஸ்ப்களின் உருவவியல் மாற்றம் இப்பகுப்பாய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக, கஸ்ப் நிலவுருவம் மாற்றத்திற்கு உட்பட்ட பகுதிகளாக குருக்கள்மடம் வடக்கு, வேடர் குடியிருப்பு, புதுக்குடியிருப்பு தெற்கு, கிரான்குளம் வடக்கு, களுதாவளை, களுவாஞ்சிக்குடி வடக்கு, ஓந்தாச்சிமடம், கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு போன்ற பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. மேலும், ஆய்வில் கஸ்ப் நிலவுருவங்களை அதிகளவாகக் கொண்ட கரையோரப் பகுதிகள் அதிகளவு மணற்கடற்கரையோரத்தையும் கொண்டு காணப்படுவதினையும் அறியமுடிகின்றது.

**திறவுச் சொற்கள் :** கரையோரம், நிலவுருவம், உருவவியல், அரித்தல், படிதல், மாற்றங்கள்.

# முன்மொழியப்பட்ட இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் பற்றிய பொதுமக்களின் கண்ணோட்டம்: மன்னார் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கள ஆய்வு

**Imam Fathima Ishama**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
ishamaimam99@gmail.com
**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது இந்தியா- இலங்கை நிலப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் தொடர்பான மக்களின் கண்ணோட்டத்தை விரிவாக ஆராய்கின்றது. இப்பாலத்தின் மூலம் ஏற்படக்கூடிய வாய்ப்புகளைக் கண்டறியும் வகையில் வினாக்கொத்து மற்றும் நேர்காணலின் மூலம் தகவல்கள் பெறப்பட்டுப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இந்தியா-இலங்கை நிலப்பாலம் ஒரு பொது நலத்திட்டமாக மட்டுமல்லாமல் இரு நாடுகளுக்கும் பொருளாதார, சமூக, கலாசார, சூழலியல் அடிப்படையில் பல்வேறு தாக்கங்களை உருவாக்கக் கூடிய மிக முக்கியமான ஒரு முயற்சியாகவும் விளங்குகின்றது. இரு நாட்டு அரசுகளும் மக்களின் தேவைகளைப் புரிந்து சமூக நலன்களையும் சூழல் பாதுகாப்பையும் முன்னிறுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சர்வதேச சட்டங்களுடன் இணைந்த வகையில் முறையான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டால் மக்களின் நலன்களுக்கு ஏற்ப திட்டத்தை முன்னோக்கி நகர்த்த முடியும். இந்தியா-இலங்கை நிலப்பாலத்தின் மூலம் புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தமுடியும் என இவ் ஆய்வு கண்டறிந்துள்ளது. இதனால் இப்பாலம் எதிர்காலத்தில் இலங்கை-இந்தியாவிற் கிடையிலான பரஸ்பர நலன்களுக்கான ஒரு நம்பகமான பாலமாகத் திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திறவுச் சொற்கள்:** நிலப்பாலம், பாரிய உட்கட்டமைப்புத் திட்டம், மக்கள் கண்ணோட்டம், மன்னார், இந்தியா-இலங்கை.

# மாத்தளை நகரின் கடந்த இரு தசாப்த கால (2004-2024) நிலப் பயன்பாட்டு மாற்றம்

**Rajendran Pavithra**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
p81203833@gmail.com
**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் நகர நிலப் பயன்பாட்டு மாற்றமானது நகரங்களின் நிலையான அபிவிருத்தியில் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளது. இலங்கையின் பிரதான நகரங்களில் ஒன்றாகக் காணப்படும் மாத்தளை நகரில் நிலப் பயன்பாடானது கடந்த சில தசாப்தங்களாக குடித்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையில் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றது. எனினும், இத்தகைய நிலப் பயன்பாட்டு மாற்றங்கள் தொடர்பிலான புரிதலானது மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது. அந்தவகையில், மாத்தளை நகர நிலப் பயன்பாட்டில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியினுள் (2004 - 2024) எவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என ஆராய்வதனை நோக்காகக் கொண்டு இவ் ஆய்வானது முன்னெடுக்கப் பட்டுள்ளது. ஆய்விற்கான தரவுகள் கூகுள் ஏர்த் படங்கள், மாத்தளை நகர நிலப் பயன்பாட்டுப் படம், இடவிளக்கப்படம், மாத்தளை நகர அபிவிருத்தி அதிகார சபை அறிக்கைகள் ஆகிய இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்தும், முதலாம் நிலைத்தரவு சேகரிப்பு முறைகளான நேரடி அவதானிப்பு, பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் ஆகியன மூலமும் பெறப்பட்டுள்ளன. இரு ஆண்டுகளுக்குமான நிலப் பயன்பாட்டுப் படங்கள் தயாரிக்கப்பட்டு நிலப் பயன் பாட்டு மாற்றமானது இனங்காணப்பட்டுள்ளது. பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான நிலப் பயன்பாட்டு அம்சங்களாக கட்டமைக்கப்பட்ட பகுதி, நெற்பயிர்ச் செய்கை, வீட்டுத் தோட்டம், காடுகள், நீர்நிலைகள், ஏனையப் பயிர்கள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 2004 - 2024 காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் வனப் பரப்பு, நெற்செய்கை நிலம், வீட்டுத்தோட்டம் மற்றும் ஏனைய பயிர் நிலங்களில் அளவுகளில் வீழ்ச்சி ஏற்பட, கட்டமைக்கப்பட்ட பகுதிகளின் பரப்பில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கட்டமைக்கப்பட்ட பகுதியானது 2004 ஆம் ஆண்டில் 33 சதவீதமாக இருந்து, 2024 ஆம் ஆண்டு 43 சதவீதமாக அதிகரித்துள்ளது. மாறாக, நெற்பயிர்ச்செய்கை நிலமானது 2004 ஆம் ஆண்டில் 5.8 சதவீதத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு 3.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. இதே போன்று வனப்பரப்பானது 2004 ஆம் ஆண்டில் 9.2. சதவீதத்தில் இருந்து 2024 ஆம் ஆண்டு 5.4 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. நகர சனத்தொகை அதிகரிப்புடன் இணைந்த வகையில் நகர விரிவாக்கம், பொருளாதார நடவடிக்கைகளின் விருத்தி காரணமாக நகரின் பசுமைப் போர்வையின் அளவானது

குறைவடைந்து வருவதுடன், கட்டமைக்கப்பட்ட பரப்பானது அதிகரித்து வருகின்றது. இத்தகைய மாற்றங்கள் நீண்ட கால நோக்கில், நகரச் சுற்றுச் சூழலியலிலும் சமூகப் பொருளாதார நிலைமைகளிலும் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன. எனவே, நகர வளர்ச்சி மற்றும் விரிவாக்கப் போக்கு மற்றும் பாங்கின் அடிப்படையில் நிலப் பயன்பாட்டு மாற்றங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதும், நிலைபேண் நகர அபிவிருத்தியினை அடிப்படையாகக் கொண்டு நகர நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் செயற்பாடுகளை முன்னெக்க வேண்டியதும் அவசியமாகும்.

**திறவுச் சொற்கள் :** நகர விரிவாக்கம், குடித்தொகை அதிகரிப்பு, நிலப் பயன்பாட்டு மாற்றம், கட்டமைக்கப்பட்ட பகுதி, விவசாய நிலங்கள்.

# நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சாய்வுநிலங்களின் நிலப்பயன்பாட்டினை முகாமைசெய்தல் : நிலையான பாதுகாப்பிற்கான வழிமுறைகள்

**Vijayakumar Vinothani**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vino98685@gmail.com,
**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் மத்திய மலைநாட்டுச் சாய்வுகள் பல்வேறுபட்ட இயற்கை மற்றும் மானிடக் காரணிகளின் விளைவாக அதிகளவிலான அழுத்தங்களுக்கு உள்ளாகி வருவதுடன் அண்மைய தசாப்த காலமாக சாய்வுகளின் நிலையுறுதித் தன்மை தொடர்பான பல பிரச்சினைகளை இப்பிரதேசம் எதிர்நோக்கி வருகின்றது. இவற்றில் நிலப்பயன்பாட்டுப் பாங்கு மற்றும் சாய்வுகளின் முறையற்ற முகாமைத்துவம் ஆகியன முக்கிய செல்வாக்குச் செலுத்துகின்றன. அவ்வகையில், நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சாய்வு நிலங்களின் நிலப்பயன்பாடு மற்றும் சாய்வு முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, நிலையான பாதுகாப்புக்கான வழிமுறைகளை முன்வைப்பதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும். ஆய்வுப் பிரதேச சாய்வு நிலங்களின் தன்மை, நிலப்பயன்பாடு, முகாமைத்துவ செயற்பாடுகள் என்பன தொடர்பில் இங்கு ஆராயப் பட்டுள்ளது. இவ் ஆய்வானது அளவுசார் மற்றும் பண்புசார் முறையியலைப் பயன்படுத்திக் கலப்புமுறை ஆய்வாக முன்னெடுக்கப்பட்டாலும், அளவுசார் முறையியலே பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் பிரதானமாக நிலப்பயன்பாட்டுப் படங்கள், தரையுயர மாதிரி, நேரடி அவதானிப்பு, குழுக் கலந்துரையாடல், பிரதான தகவல் தருநருடனான நேர்காணல் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்டன. ஆய்வுப் பிரதேசத்தின் சாய்வுகள், நிலப்பயன்பாட்டுப் பாங்கினைப் படமாக்கல் செய்வதற்காக ArcGIS 10.4.1 பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலப்பயன்பாடானது சாய்வு மற்றும் உயர அடிப்படையில் வேறுபட்டமைகின்றமை ஆய்வில் கண்டறியப்பட்டது. ஆய்வுப் பிரதேசம் 1400m - 2400mக்கு இடைப்பட்ட வகையில் உயர வேறுபாடுகளைக் கொண்டுள்ளதுடன் இதில் 1400m – 1600m வரையான பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கையும், 1800m – 2000m மற்றும் 2200m – 2400m வரையான சமவுயரக் கோட்டுப் பகுதிகளில் அடர்ந்த காடுகளும் பிரதானமாகக் காணப்படுகின்றன. மென்சாய்வான பகுதிகளில் வீட்டுத்தோட்டமும் மரக்கறிப் பயிர்ச்செய்கையும் அதிகம் காணப்படுவதுடன் சாய்வு கூடிய பகுதிகளில் தேயிலைப் பயிர்ச்செய்கையும் பெருந் தோட்டக் காடுகளும் பிரதானமாக காணப் படுகின்றன. சாய்வுகள் மீதான மானிட அழுத்தங்கள் பரம்பிக் காணப்படும் பகுதிகளாக ஆய்வுப் பிரதேசத்தின் மத்திய, மேற்கு,

கிழக்கில் ஒரு சில பகுதிகள் விளங்குகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் நடைமுறையில் உள்ள முக்கியமான சாய்வுநில முகாமைத்துவ வழிமுறைகளாக சமவுயரக் கோட்டு விவசாயம், படிமுறைப் பயிர்செய்கை, மூடுபயிர் மற்றும் கற்கட்டடங்கள் ஆகியன இனங்காணப்பட்டதுடன் கேபியன் அணைகள், கொங்றீட் தடுப்புச்சுவர்கள் வீதிகளின் வழியே சாய்வினைப் பேணுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சாய்வுக்கு ஏற்ற வகையில் முறையான நிலப்பயன்பாடின்றி சாய்வுகள் அழுத்தங்களுக்கு உள்ளாகுதல், முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் இன்மை போன்றன காரணமாக சாய்வுகளின் நிலையுறுதித்தன்மை வெகுவாகப் பாதிக்கப்படுவதுடன் மண்ணரிப்பு, நிலச்சரிவு ஆகிய பிரச்சினைகளுக்கும் இது வழிவகுக்கின்றது. இந்நிலையில், ஆய்வுப் பிரதேச சாய்வுகளுக்குப் பொருத்தமான நிலப்பயன்பாட்டினை உறுதிப்படுத்துவதோடு, நிலையான பாதுகாப்பிற்கான முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்வது ஆய்வுப் பிரதேசத்தின் சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் நிலைப்பிற்கு அவசியமாகும்.

**திறவுச் சொற்கள்:** சாய்வுகள், நிலப்பயன்பாடு, மனித அழுத்தங்கள், சாய்வுநில முகாமைத்துவம், நிலையான பாதுகாப்பு.

# கண்டி மாவட்டத்தின் பஸ்பாகே பிரதேச செயலக பிரிவில் கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றம்

**Yoganadhan Baby Shalini**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
anushalini32@gmail.com
**S. Vasanthakumary**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vasanthakumarys@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் கண்டி மாவட்டத்தில் அமையப்பெற்றுள்ள பஸ்பாகே பிரதேசம் அண்மைக் காலமாக அதிகளவில் நிலப்பயன்பாட்டு மாற்றங்களை எதிர்கொண்டு வருகிறது. இம்மாற்றங்கள் இப்பிரதேசத்தின் பௌதிகச் சூழலில் மாத்திரமன்றி, இப்பிரதேச மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியிலும் முக்கிய தாக்கத்தினைக் கொண்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வின் பிரதான நோக்கம் ஆய்வுப் பிரதேசத்தின் 2003 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இரு தசாப்த காலப்பகுதியில் நிலப்பயன்பாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங் களைக் கண்டறிதலாகும். இரு தசாப்த காலப்பகுதியில் (2003-2023) நிலப்பயன்பாட்டு மாற்றத்தைக் கண்டறிவதற்காக முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் இவ் ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம்நிலைத் தரவுகள் நேரடி அவதானிப்பு, நேர்காணல் மூலமாகவும் இரண்டாம் நிலைத் தரவுகள் 2003, 2023 ஆம் ஆண்டுகளுக்கான செய்மதிப்படங்கள், வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - கண்டி (2023), பஸ்பாகே பிரதேச செயலக மூலவளத்திரட்டு (2023) ஆகியவற்றில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. 2003, 2023 ஆம் ஆண்டுகளுக்கான நிலப்பயன்பாட்டு அம்சங்களானவை Google Earth Pro மற்றும் Arc GIS 10.4.1 மென்பொருட்களைப் பயன்படுத்திப் படமாக்கல் செய்யப்பட்டு குறித்த காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஆய்வின் பெறுபேறுகளின்படி ஆய்வுப் பிரதேசத்தில் பிரதான நிலப்பயன்பாட்டு அம்சங்களாக காடுகள், கட்டமைக்கப்பட்ட பகுதி, தேயிலை நிலங்கள், நீர்நிலைகள், விவசாய நிலங்கள், தரிசு நிலங்கள் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. 2003-2023 காலப்பகுதியில் ஆய்வுப் பிரதேசத்தின் நீர்நிலைகள் பாரியளவில் மாற்றமின்றிக் காணப்பட தேயிலை நிலங்கள், காட்டுப் பரப்பு, தரிசு நிலங்கள் மற்றும் ஏனைய பயிர்கள் காணப்படும் நிலப்பரப்பில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் இப்பிரிவில் விவசாய நிலங்களின் வீழ்ச்சியுடன் கட்டமைக்கப்பட்ட பகுதியின் பரப்பானது குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டுகின்றது. கட்டமைக்கப்பட்ட பகுதியானது 2003 இல் 1229.7 ஹெக்டயரிலிருந்து 2023 ஆம் ஆண்டு 4774.8 ஹெக்டயராக அதிகரித்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் நிலப்பயன்பாட்டு மாற்றத்திற்கு அடிப்படையாக

குடித்தொகை வளர்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகள், காடழிப்பு, பொருளாதார நடவடிக்கைகள், தேயிலை நிலங்கள் அழிவடைதல் போன்ற காரணிகள் இனங்காணப் பட்டுள்ளன. இந்நிலையில், ஆய்வுப் பிரதேசத்தில் சமூக பொருளாதார மேம்பாட்டினையும் சூழல் நிலைத்திருப்பினையும் பேணும் வகையில் நிலப்பயன்பாட்டுடன் தொடர்புடைய பிரச்சினைகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளை நிலைபேண் தன்மையின் அடிப்படையில் நிலப்பயன்பாட்டுத் திட்டமிடல் மற்றும் தீர்மானங்களை எடுக்க வேண்டியது அவசியமாகும்.

**திறவுச் சொற்கள் :** நிலப்பயன்பாட்டு மாற்றம், கட்டமைக்கப்பட்ட பகுதி, தேயிலைப் பயிர்செய்கை, குடியிருப்பு விரிவாக்கம், காடழிப்பு.

# அனுராதபுர மாவட்டம் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் விவசாய நடவடிக்கைகள் மீதான காட்டு விலங்குகளின் தாக்கம்

**Mohammadhu Ansar Aroosiya**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
aroosiya2019@gmail.com
**V. Pathmanandakumar**
Department of Geography, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pathmanandakumarv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இவ் ஆய்வானது அனுராதபுர மாவட்டத்தின் கெபிதிகொள்ளேவ பிரதேச செயலகப் பிரிவில் காட்டு விலங்குகளின் ஊடுருவல் விவசாய நடவடிக்கைகளுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்கிறது. கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள், நேர்காணல்கள், நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல்களின் மூலமாக 98 விவசாயக் குடும்பங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட முடிவுகள் காட்டு யானைகள் விவசாயத்தைப் பாதிக்கும் முக்கியமான விலங்குகளாக இருக்கின்றன என்பதை வெளிக் கொணர்கின்றன. இவை பயிர்களை மேய்தல், சேதப்படுத்துதல், நீர்ப்பாசன வசதிகளை அழித்தல் மற்றும் பழ மரங்களை முறித்தல் போன்ற செயற்பாடுகள் மூலம் அதிக சேதங்களை ஏற்படுத்துகின்றன. சிறுபோக மற்றும் பெரும்போக காலங்களில் குறிப்பாக அறுவடை நேரங்களில் பெரும்பாலான விவசாயிகள் முற்றிலும் பயிர்ச்சேதத்தைச் சந்தித்துள்ளனர். இதனால் விவசாய முறைகளை மாற்றும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மின்வேலிகள் மற்றும் பயமுறுத்தும் சாதனங்கள் போன்ற தடுப்பு நடவடிக்கைகளுக்காகக் கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. வருமான இழப்பு, கடன்சுமை அதிகரித்தல், உணவுப் பற்றாக்குறை போன்ற பொருளாதாரப் பாதிப்புகள் சிறு நிலப்பரப்பைக் கொண்ட விவசாயிகளிடம் அதிகமாகக் காணப் படுகின்றன. அரசு வழங்கும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் போதுமானவையாகவும் சமனிலையாகவும் வழங்கப்படுவதில்லை. எனவே, மனித – வனவிலங்கு மோதலைக் குறைக்கும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மற்றும் பிராந்திய அடிப்படையிலான கொள்கைத் தலையீடுகள் அவசியம் என இந்த ஆய்வு வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள்:** மனித – வனவிலங்கு மோதல், விவசாய சேதம், காட்டு யானைகள், கிராமப்புற வாழ்வாதாரம், கெபிதிகொள்ளேவ.

# கிழக்கு மாகாணத் தமிழ் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் சவால்களும்: திகாமடுல்ல மாவட்டத்தின் 2020, 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**Puspakaran Dilasan**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
dilasn201@gmail.com
**V. Gunaretnam**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
gunaretnam@esn.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பானது மக்களின் இறைமை யினூடாக நாட்டில் சட்டத்தை ஆக்குவதற்கான தத்துவத்தினையும் அதனை நடைமுறைப் படுத்தல் மற்றும் நீதியை நிலைநாட்டு வதற்குரிய அதிகாரத்தைக் கொண்டதாகவும் காணப்படுகிறது. ஒரு நாட்டில் பாராளுமன்றத் தேர்தலினூடாக மக்கள் இறைமை அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் முறையாக ஒப்படைக்கின்றனர். ஜனநாயக வரம்பினுள் அரசியல் கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் எனப் பெரும்பாலான வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டுப் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் மூவினம் இணைந்து வாழ்கின்ற போதிலும், தமிழ்ப் பிரதிநிதிகள் குறைவான அளவிலேயே ஒவ்வொரு தேர்தலிலும் தெரிவு செய்யப்படுகின்றனர். இம்மாகாணத்தில் தமிழர்களுடைய வாக்களிப்பு முறையானது ஏனைய இனத்தவர் களைவிடக் குறைவானதாகவும் சிதறுகின்றதாகவும் காணப்படுகிறது. குறிப்பாக, திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டு தமிழ்ப் பிரதிநிதித்துவம் கிடைக் காமல் போய்விட்டது. ஆனால், 2024ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் சொற்ப (88) வாக்குகளினால் பிரதிநிதித்துவமானது கிடைத்துள்ளது. இதனால் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது பல சவால்களினை எதிர்நோக்குகின்ற ஒரு விடயமாக காணப்படுகின்றது. இந்த விடயம் தொடர்பாக கரிசனை கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் திகாமடுல்ல மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்றும் பாதுகாக்கப்படலாம். தமிழ் வேட்பாளர்கள் மக்களுடனான தொடர்பினைச் சிறந்த வகையில் பேணுவதுடன் சரியான தேர்தல் விஞ்ஞாபனங்களையும் முன்வைக்க வேண்டும். தமிழ்ப் பிரதிநிதியின்மையினால் தமிழ் மக்களுக்கான சேவைகள், அபிவிருத்திகள் குறைந்த வண்ணம் கிடைக்கின்றன. தமிழ் மக்கள் பாரிய சவால்களைத் தொடர்ந்தும் எதிர்நோக்கிய நிலையில் திகாமடுல்ல மாவட்டத்தில் காணப்படுகின்றனர்.

**திறவுச் சொற்கள் :** தமிழ் மக்கள், மக்கள் பிரதிநிதிகள், திகாமடுல்ல மாவட்டம், பாராளுமன்றத் தேர்தல்.

# பொதுத்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு: 1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பில் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**P. Ajitha**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
Pushparajahajitha36@gmail.com
**A.Kanneraj**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
kanneraja@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

பொதுத்துறை நிர்வாகமானது கோட்பாட்டடிப்படையில் அரசியலில் அதன் பணிகளில் சுதந்திரமான தன்மையுடன் செயற்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. எனினும், நடைமுறையில் பொதுத்துறை நிர்வாகம் அதன் செயற்பாடுகளின்போது அரசியல் தலையீடுகளுக்கு உட்படுவது உலகளவில் குறிப்பாக, மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் அம்சமாக உள்ளது. இதன்படி இலங்கையிலும் இத்தகைய போக்கின் நடைமுறைத் தன்மையினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அந்தவகையில், இலங்கையில் பொதுத்துறை நிர்வாகத்தின்மீது அரசியல் தலையீட்டின் செல்வாக்கு மற்றும் தாக்கத்தின் அளவினை இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்த ஏற்பாடுகள் ஊடாக கண்டறிந்து ஒப்பீட்டுப் பகுப்பாய்வு செய்வதை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. இவ்வாய்வு இத்தகைய சீர்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தின் சுதந்திரத்திற்கும் செயல்திறமைக்கும் எவ்வகையிலான சவால்களை ஏற்படுத்தக் கூடும் என்பதை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டுள்ளது. பொதுத்துறை நிர்வாகத்தின் வினைத்திறன் மற்றும் தரத்தினை அதிகரித்து, அரசியல் தலையீட்டினைக் குறைக்க எவ்வகையான சீர்திருத்தங்கள் முன்மொழியப்படலாம் என்பதைப் பரிந்துரைக்கும் முகமாகவும் இவ்வாய்வு முன்வைக்கப் பட்டுள்ளது. இவ்வாய்வு பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களான நூல்கள், இணையத்தளம், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்றவற்றைப் பயன்படுத்தித் தரவுகள் சேகரிக்கப்பட்டு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகளை ஆராய்வதன் மூலம் இச்சீர்த்திருத்த ஏற்பாடுகள் பொதுத்துறை நிர்வாகத்தினைச் சுதந்திரமான அமைப்பாக மாற்றுவதில் அரசியல் தலையீட்டினை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளமை கண்டறியப்பட்டது. இருந்தாலும், அவை சீராக அமுல்படுத்தப்படாததினால் நடைமுறையில் தோல்வி அடைந்துள்ளது. இந்நிலையில், எதிர்கால பரிந்துரைகளை இவ்வாய்வு முன்வைக்கிறது.

**திறவுச் சொற்கள் :** இலங்கை, பொதுத்துறை நிர்வாகம், அரசியல் தலையீடு, அரசியல் யாப்புத் திருத்தங்கள், ஜனாதிபதி.

# பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் அரசியல் மற்றும் வாக்காளர் நடத்தை : 2019-2024 ஜனாதிபதித் தேர்தல்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**Thevarajah Kinsiya Miyomi**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
kinsiya45679@gmail.com
**N.Pushparajah**
Department of Social Science, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
pushparajahn@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

பிரதிநிதித்துவ ஜனநாயக சூழலில் வாக்காளர் நடத்தை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. அதன்படி வாக்காளர் நடத்தை தொடர்பாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசிய மானதாக அமைகின்றது. இலங்கையில் 2019 – 2024 காலப்பகுதியில் இடம்பெற்ற கொரோனா பெருந்தொற்று, ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் மற்றும் பொருளாதார நெருக்கடி என்பன அக்காலத்தில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் வாக்காளர் நடத்தையில் பல மாற்றங்களை ஏற்படுத்தி இருந்தன. வாக்காளர்களின் வாக்களிப்புச் செயற்பாடும் வீழ்ச்சி நிலையில் காணப்பட்டது. இந்நிலையில், 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் மக்கள் வாக்களிப்பில் முழு ஆர்வத்துடன் செயற்படுவதற்குப் பல காரணிகள் தடையாக அமைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது. அந்தவகையில், 2019 – 2024 ஜனாதிபதித் தேர்தல்களில் இலங்கையின் 22 தேர்தல் மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு தேர்தல் தொகுதியான பட்டிருப்புத் தேர்தல் தொகுதி தமிழ் மக்களின் வாக்காளர் நடத்தையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையையும் வாக்களிக்கும் செயன்முறை குறைவடைந்துள்ளமையையும் இவ்வாய்வின் மூலம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாய்வின் மூலம் மாற்றங்களின் பிரதிபலிப்புகள் 2019 மற்றும் 2024 ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் ஊடாக வெளிக்காட்டக் கூடியதாக அமைகின்றது. அந்தவகையில், இவ்வாய்வானது ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள தேர்தல் தொகுதியில் தமிழ் மக்களின் வாக்களிப்பு நடத்தை குறைந்து கொண்டு செல்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைக் கண்டறிவதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வுக் காகச் சேகரிக்கப்பட்ட தரவுகள் பொருத்தமான பண்புசார் பகுப்பாய்வு மற்றும் அளவுசார் பகுப்பாய்வு முறையில் அமைந்த கலப்புமுறை பகுப்பாய்வு (Mixed Method) முறை மூலம் சீரற்ற நோக்க மாதிரியின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுப் பொருத்தமான தகவல்கள் பெறப்பட்டுள்ளன. இவை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு எதிர்கால வாக்குரிமையின் பிரயோகத்தினைப் பட்டிருப்புத் தேர்தல் தொகுதித் தமிழ் மக்கள் மத்தியில் முக்கியத்துவம் அடையச்செய்யும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**திறவுச் சொற்கள் :** பட்டிருப்புத் தேர்தல் தொகுதி, தமிழ் மக்கள், வாக்களிப்பு நடத்தை, ஜனாதிபதித் தேர்தல்.

# உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பதில் சிவில் சமூகத்தின் வகிபாகம்: ஏறாவூர்பற்றுப் பிரதேச சபையை அடிப்படையாகக் கொண்ட விசேட ஆய்வு

**Rajanitharan Thushanthani**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
rjthushanthani2024@gmail.com
**A.Kanneraj**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
kanneraja@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

ஜனநாயக அரசுகளில் அரசியல் பிரதிநிதித்துவத்தில் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துதல் என்ற விடயம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவமானது பின்தங்கிய நிலையில் இருப்பதனால், ஜனநாயகமும் குறைமதிப்பீட்டிற்கு உள்ளாகியுள்ளது. இந்நிலையில், உள்ளூர் மட்டத்தில் இருந்து ஜனநாயகத்தை வலுப்படுத்தும் நோக்கில் நிறுவப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல் என்பது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கான சாதகமான வாய்ப்பாக சிவில் சமூக செயற்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. ஆகவே, பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஏற்படுத்துவதில் சிவில் சமூக செயற்பாடுகளின் வகிபாகம் எத்தகையது என்பதனை ஆராய வேண்டிய தேவையுள்ளது. அதனடிப்படையில் அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக இப்பிரதேசத்திற்குள் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தினை ஊக்குவிப்பதற்கான நேரடியான வழிமுறைகள் சிவில் சமூக அமைப்புக்களினால் கையாளப்படுவது குறைவாக இருப்பினும், பெண்களின் திறனை மேம்படுத்தல் என்பதனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்கின்ற செயற்பாடு களின் மூலமாக பெண்களின் அரசியல் திறனையும் ஊக்குவிக்கின்றன என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அத்துடன் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் குறித்து நேரடியாக செயற்படுகின்ற அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு இப்பிரதேசத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் காணப்படுகின்ற தடைகள் சவால்களை ஏற்படுத்துகின்றன.

**திறவுச் சொற்கள்:** பால்நிலை சமத்துவம், அரசியல் பிரதிநிதித்துவம், திறன் மேம்பாடு, குடும்பச் சூழல்.

# இலங்கையில் ஜனநாயக முறைமையைப் பாதுகாத்தல்: ஜனாதிபதியின் அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான ஆய்வு

**Chandramani Jeyanthi**

Department of Social Sciences, Political Sciences, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
chandramanijeyanthi@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பில் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த முறைமையின் மூலம் ஜனாதிபதிக்கு முக்கிய அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அதே சமயம் நாடாளுமன்றத் தலைமையிலான ஜனநாயக கட்டமைப்பும் நிலைநிறுத்தப்பட்டுள்ளது. அரசின் வினைத்திறனான செயற்பாடு, அரசியல் நிலையாக்கம் மற்றும் ஜனநாயக அடிப்படைக் கொள்கைகளை உறுதிப்படுத்தல் என்பதற்காக நிறைவேற்று ஜனாதிபதி முறை உருவாக்கப்பட்டது. அரசாங்கத்தின் நிலைமை மற்றும் தொடர் நிறைவேற்று அதிகாரத்தை உறுதிசெய்வதில் முக்கிய பங்கு ஜனாதிபதியிடம் காணப்படுகின்றது. இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை நிலைநிறுத்த முன்னேற்றமாக அமைந்தாலும், மக்கள் நலனில் மையமாக்கப்பட்ட ஜனநாயக சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. இந்த ஆய்வு, இலங்கையின் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட நிர்வாகம், சட்டம், பாதுகாப்பு சார்ந்த விசாலமான அதிகாரங்கள் ஜனநாயகத்தின் நிலைத் தன்மையையும் செயற்பாடுகளையும் எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்கிறது. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் பிறகு உருவான ஜனாதிபதி முறைமை, வலுவான தலைமையை உருவாக்கியுள்ள துடன், அதிகாரப் பிரிப்பு, பொறுப்பாளர் துறைகள் மற்றும் குடிமக்களின் உரிமைகள் மீதான பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆய்வில் அரசியலமைப்பு ஆவணங்கள், நாடாளுமன்ற விவாதங்கள், முந்தைய ஆய்வுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, உள்ளடக்கப் பகுப்பாய்வு (Content Analysis) மேற் கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் நிர்வாக அதிகாரங்களுக்குத் தெளிவான வரம்புகள் மற்றும் அமைப்புச் சீர்திருத்தங்கள் அவசியம் என்பதே இந்த ஆய்வின் பரிந்துரை ஆகும்.

**திறவுச் சொற்கள்:** நிறைவேற்றுத்துறை ஜனாதிபதி, ஜனநாயகத்தன்மை, அரசியல் யாப்புச் சீர்த்திருத்தங்கள்.

# அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப்பதில் உள்ள சவால்கள்: பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA) மற்றும் அரபு-தமிழ் ஒலி ஒப்பீடுகளைப் பயன்படுத்திய விளக்க ஆய்வு

**Habeebul Buhary Razeen Riza**
Department of Arabic, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
razeenbuhary2019@gmail.com
**I. M. Thalib**
Department of Arabic, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
thalibm@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

அரபி, தமிழ் ஆகிய மொழிகள் மொழியியல் ரீதியாக வேறுபட்ட மூலங்களைக் கொண்டவை. அரபி மொழி செமித்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது. இது 300 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பேசப்படும் மொழிகளின் குடும்பமாகும். இக்குடும்பத்தில் இன்று அதிகமாகப் பேசப்படும் மொழியாக அரபி மொழி திகழ்கிறது. சுமார் 270 மில்லியன் மக்கள் இம்மொழியைப் பேசுகின்றனர். மறுபுறம், தமிழ் மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்ததாகும். இம்மொழிக்குடும்பத்தினைச் சேர்ந்த மொழிகளை 215 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பேசுகின்றனர். தமிழ் மொழியை மட்டும் உலகம் முழுவதிலும் சுமார் 80 மில்லியன் மக்கள் பேசுகின்றனர். இவ்வாறு இரு மொழிகளும் வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்தவையாக இருப்பதால், அவற்றின் எழுத்து அமைப்பு, ஒலிப்பியல் கட்டமைப்பு மற்றும் எழுத்து நடைமுறைகளில் அடிப்படையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்த வேறுபாடுகள், குறிப்பாக ஒலியியல் அடிப்படையில், அரபி மொழியிலிருந்து தமிழ் மொழிக்குப் பெயர்களை ஒலிபெயர்ப்பதில் பல்வேறு சிக்கல்களை உருவாக்குகின்றன. இவ்வாய்வு, அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் ஒலிபெயர்ப் பதில் உள்ள ஒலியியல் சவால்களை ஆராயும் நோக்கில் மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (International Phonetic Alphabet - IPA) என்ற நுணுக்கமான ஒலிப்பியல் குறியீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது. இம்முறை, இரு மொழிகளின் ஒலியியல் அமைப்புகளை ஒப்பீடு செய்து, அரபிய மொழிப் பெயர்களைத் தமிழில் துல்லியமாக எழுதுவதற்கான வழிமுறைகளை முன்வைக்க உதவுகிறது. இந்த ஆய்வின் முக்கியமான அம்சம், அரபி மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளின் உயிரொலிகள் மற்றும் மெய்யொலிகளை IPA வழியாக ஒப்பீடு செய்வதில் இருக்கிறது. குறிப்பாக, அரபி மொழியில் உள்ள சில ஒலிகளுக்குத் தமிழில் நேரடி ஒலி நிகர்கள் இல்லாத சூழலில், அவற்றைத் தமிழில் எவ்வாறு துல்லியமாக ஒலிபெயர்க்கலாம் என்பதற்கான மாற்று வழிகளை முன்மொழிகிறது. ஆய்வின் முடிவுகள், அரபி-தமிழ் ஒலியியல் ஒப்பீடு அட்டவணைகளை வழங்குவதுடன், ஒலி நிகர்களை அடையாளம் காண்பதிலும், நேரடி ஒப்பீடுகள் இல்லாத ஒலிகளுக்கான மாற்று அணுகுமுறைகளையும் பரிந்துரைக்கின்றன. மேலும், தற்போதைய ஒலிபெயர்ப்பு

நடைமுறைகளில் காணப்படும் பிழைகளைக் குறைத்து, மொழிபெயர்ப்பாளர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் நடைமுறை வழிகாட்டியாகவும் பயன்படுகிறது. மொத்தத்தில் இவ்வாய்வு ஒலியியல் மற்றும் ஒப்பீட்டு மொழியியல் துறைகளில் புதியதொரு பங்களிப்பைச் செய்யும் வகையில் அமைகிறது. மேலும், அரபி, தமிழ் ஆகிய மொழிகளுக்கு இடையிலான மொழிச் செலாவணி மற்றும் கலாசாரப் பரிமாற்றத்தை வலுப்படுத்தும் வகையில் முக்கிய பங்காற்றும்.

**திறவுச் சொற்கள்:** பெயர்களின் ஒலிபெயர்ப்பு, தமிழ் மொழி, அரபு மொழி, உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துக்கள், பன்னாட்டு ஒலிப்பியல் அரிச்சுவடி (IPA).

# அகநானூற்றுச் செய்யுட்கள் சுட்டும் பண்பாட்டுப் பதிவுகள்

**Tharumarasa Jansika**
Postgraduate student, University of Peradeniya.
jansikatharmarasa@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வாழ்க்கையில் மனிதன் முழுநிறைவை அடைவதற்காக மேற்கொள்ளும் முயற்சியின் பயன்களின் வெளிப்பாடுகளில் ஒன்றாகப் ‘பண்பாடு’ காணப்படுகின்றது. இது மனிதகுல நன்மையை முதன்மைப் படுத்துகின்றது. சங்ககாலம் தொடக்கம் தமிழ்ப் பண்பாடு மானிட மேம்பாட்டைக் கருத்தில் கொண்டதாகவே வளர்ச்சியடைகின்றது. சங்க இலக்கியம் முதலான தமிழ் இலக்கியங்களில் பழந்தமிழ் நாட்டின் பண்பாடு, சமூகம் பற்றிய பல செய்திகள் பொதிந்துள்ளன. பண்டைத் தமிழ் மக்களின் நம்பிக்கை வழி உருவான சடங்குகள் பற்றியும் வழிபாட்டு மரபுகள் பற்றியும் பல தகவல்களைச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. அத்துடன், அம்மக்களின் உணவு, உடை, தொழில் முதலான விடயங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. தெய்வங்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கக்கூடாது என்பதற்காகவும், நோய் நொடிகள், குறைகள், துன்பங்கள், அச்சுறுத்தல்கள் என்பன விலக்கப்படல் வேண்டும் என்பதற்காகவும், விருப்பங்கள் நிறைவேற்றப்படல் வேண்டும் என்பதற்காகவும் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் சடங்குகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைச் சங்க இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. அந்தவகையில், அகநானூற்றுச் செய்யுட்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பண்பாட்டம்சங்களையும் அவற்றின் சமகாலப் போக்குகளையும் ஆராய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். எஸ். சிவலிங்கராஜா பதிப்பித்த அகநானூறு களிற்றியானை நிரை வித்துவசிரோமணி சி. கணேசையர் உரை என்ற உரைப்பனுவலையும், ந.சி. கந்தையா பதிப்பித்த உரைப் பனுவலையும் முதன்மை ஆதாரமாகக் கொண்டு, பண்புசார் ஆய்வாக இது அமைகின்றது. சங்ககால மக்களிடத்துச் சடங்கு சார்ந்ததாகவும் சமயம் சார்ந்ததாகவும் வாழ்வியல் சார்ந்ததாகவும் அமைந்துள்ள நம்பிக்கைகள் அகநானூற்றுச் செய்யுள்களில் பொதிந்துள்ளவாற்றினை அவதானிக்க முடிகின்றது. பெண்கள் இயற்கையாக அமைந்த அழகோடு மேலதிகமான சில ஒப்பனை முயற்சிகளை மேற்கொண்டிருந்தமையினையும் அகநானூறு இலக்கியம் பதிவுசெய்துள்ளது. பண்டைத் தமிழர்களிடம் வழக்கிலிருந்த குறிகேட்டல் அல்லது பலன் கேட்டல் இன்றுவரை நிலைகொண்டுள்ள ஒரு வழக்கு. தெய்வம் இறங்கி வந்து பேசும் உடல்களின்மீது மனிதருக்கு இன்றளவும் பெரும் மதிப்புள்ளது. அந்த ஆற்றுகைக்குள் நீண்ட மரபின் தொடர்ச்சி உள்ளது.

**திறவுச் சொற்கள்:** அகநானூறு, பண்பாடு, செய்யுள், பண்டைத் தமிழர்.

# பண்பாட்டுத் தேசிய நோக்கில் பாரதி படைத்த பெண்

**Sivanesh Ranjidha**
Visiting lecturer, Department of linguistics, University of Kelaniya.
sranj201@kln.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

குடியேற்ற நாடுகளில் தேசியத்தை விதைத்து அனைவரையும் ஒன்றாக இணைத்து ஆட்சிபுரியும் நோக்கில் தேசியம் ஆங்கிலேயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், ஆங்கிலேயரை நாட்டைவிட்டு விரட்டிச் சுதந்திரத்தைப் பெற சுதேசிகள் தேசியத்தைச் சுதேசப் பண்பாட்டுக் கருத்தியலோடு இணைத்து நோக்கினர். பாரதியின் கவிதைகள் அடிப்படையில் இந்தப் பண்பாட்டுக் கருத்தியல் தளத்திலேயே இயங்கியன. பாரதி தம் கவிதைகளில் கட்டமைத்த பண்பாட்டுத் தேசியம் என்பது இந்தியப் பண்பாட்டின், அதன் தொன்மங்களின் வழியாகப் பிறந்தவை. இந்தியாவுக்கே உரிய கருத்தியல்களை மக்கள் மத்தியில் கொண்டு சென்றதோடு மட்டுமல்லாமல் மரபின்வழி சமூகத்தில் இழையோடிப்போன பெண்ணடிமை, மூடநம்பிக்கை ஆகியவற்றைத் திரைவிலக்கி பெண்ணுரிமை, பெண் கல்வி, ஆண் – பெண் சமநீதி, பெண்ணைப் பாரத மாதாவாக உருவகித்துத் தேசிய உணர்வை நிலைநாட்டல் ஆகிய முயற்சியில் பாரதி முன்னின்றான். இந்திய தேசம் இனம், மதம், மொழி, பிரதேசம் எனப் பிளவுபடாது ஒரு தேசத்தின் மக்களாக அவர்கள் வாழ வேண்டும் என்னும் எண்ணத்தில் ஏற்றத்தாழ்வுகளும் அடிமையுணர்வும் உள்ள நாட்டில் தேசியம் வெற்றியளிக்காது என்பதை உணர்ந்த பாரதி, அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களைப் பாரத மாதாவாக உருவகித்து அவர்தம் விடுதலையையும் நாட்டு விடுதலையையும் இரண்டறக் கலந்து பண்பாட்டை ஒரு மூலதனமாகக் கொண்டு கவிதைகளைப் படைத்துள்ளான். இவ் ஆய்வானது பாரதியின் கவிதைகளில் பெண் பற்றிய கருத்துநிலை பண்பாட்டுத் தேசியம் மூலம் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு ஆராய்கின்றது. விபரணப் பகுப்பாய்வு முறையியல், பெண்ணியத் திறனாய்வு முறையியல் ஆகியன இவ் ஆய்வுக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ் ஆய்வானது பாரதியின் கவிதைகளை முதன்மை மூலமாகக் கொள்வதோடு, ஆய்வு தொடர்பாக வெளிவந்த கட்டுரைகளைத் துணை மூலங்களாகவும் கொள்கிறது.

**திறவுச் சொற்கள் :** பண்பாட்டுத் தேசியம், கருத்துநிலை, பெண்ணியம், தொன்மம், காலனியம்.

# திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு

**Balarathnam Saranya**
Postgraduate student, University of Peradeniya.
balarathnamsaranya2@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் ஆய்வுப் பரப்பில் திருக்குறளுக்கு முக்கிய இடமுண்டு. பொதுமறையான திருக்குறள் குறித்துப் பல கோணங்களில் பல்வேறு விதமான ஆய்வு முயற்சிகள் இன்றளவிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. திருக்குறள் இல்லறவியல் உரைகளில் ஆணாதிக்கச் சிந்தனை வெளிப்பாடு - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வானது, திருக்குறளின் இல்லறவியலை அடிப்படையாகக் கொண்டு அவற்றில் வெளிப்படும் ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்கின்றது. தமிழில் தோற்றம் பெற்ற அற இலக்கியங்களுக்குத் தலைமைப் பீடமாக அமையப்பெற்றது திருக்குறளாகும். திருக்குறளில் வெளிப்படும் கருத்துக்கள், அதன் அமைப்பு முறை, அதன் உரைகள் மற்றும் உரையாசிரியர் குறித்த ஆய்வு, திருக்குறளில் பெண், திருக்குறள் கூறும் இல்லறம், துறவறம் என்பன குறித்த எண்ணிலடங்கா பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருவள்ளுவர் கூறிய குறள்களுக்கும் அவற்றுக்கு எழுதப்பட்ட உரைகளுக்கும் இடையிலேயே சில வேறுபாடுகள் கண்டறியப்பட்டன. இந்நிலையில், திருக்குறளுக்கு எழுதப்பட்ட முக்கிய உரையான பரிமேலழகர் உரையோடு மணக்குடவர் உரை, பழைய உரை, புலியூர்க்கேசிகன் உரை முதலிய உரைகளை மையமாகக் கொண்டு திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படுகின்ற ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது. இவ்வாய்வானது விமர்சன மற்றும் விளக்கமுறை ஆய்வு அணுகுமுறை என்பவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்விற்காகத் திருக்குறளின் அறத்துப்பாலின் இல்லறவியல் பகுதி மட்டும் எடுத்துக்கொள்ளப்படுகின்றது. திருக்குறள் அறத்துப்பாலின் இல்லறவியல் பகுதி முதலாம்நிலைத் தரவாகவும் திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகள், திருக்குறள் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன. திருக்குறளின் இல்லறவியலில் வெளிப்படும் ஆணாதிக்கச் சிந்தனையை ஆராய்தல் என்ற அடிப்படையில் இவ்வாய்வானது முக்கியத்துவம் பெறுகின்றது.

**திறவுச் சொற்கள் :** திருக்குறள், ஆணாதிக்கம், இல்லாள், கற்பு, மக்கட்பேறு.

# சமூகவியல் நோக்கில் ‘கடவுளரும் மனிதரும்’ சிறுகதைத் தொகுப்பு

**N. Remsika**
Department of Tamil, Faculty of Arts, University of Peradeniya.
rpiraveen0@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

படைப்பாளிகள் சமூகத்திற்குக் கூறவிழைகின்ற விடயங்களைத் தனது ஆற்றலுக்கும் கருத்துநிலைக்கும் ஏற்றவகையில் படைப்பினூடாக வெளிப்படுத்திச் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முனைகின்றார்கள். அவ்வாறு சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற கருவியாக சிறுகதை இலக்கிய வடிவமும் காணப்படுகிறது. ஈழத்துச் சிறுகதை உலகில் முக்கியத்துவம் மிக்க பெண் படைப்பாளிகளில் ஒருவராக பவானி ஆழ்வாப்பிள்ளை திகழுகின்றார். இவரது சிறுகதைகளில் பெண்கள் சார்ந்த விடயங்கள் மற்றும் அவர்கள் சார்ந்த சமூக நடைமுறைகள் பல பரிமாணங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. பெண்சார் விடயங்கள் சமூகப் பண்பாட்டோடு எதிர்காலத்துக்குமாக கட்டமைக்கப்படுவன. அதாவது, ஒரு சமுதாயத்திலிருந்து இன்னொரு சமுதாயத்தினருக்குக் கடத்தப்பட்டு வருகின்ற பண்பாடாகக் காணப்படுகின்றது. பவானி ஆழ்வாப்பிள்ளையின் ‘கடவுளரும் மனிதரும்’ சிறுகதைத் தொகுப்புக் குறித்த பதிவுகள் ஆங்காங்கே இடம்பெற்றாலும் அதில் இடம்பெற்றுள்ள கதைகள் ஒவ்வொன்றினதும் சமூகத்தின் மீதான நோக்கு, பார்வை முதலான விடயங்கள் விரிவாகவும் ஆழமாகவும் ஆராயப்படவில்லை. இதனையே இவ்வாய்வு ஆய்வு இடைவெளியாகக் கொண்டுள்ளது. அருண்மொழிவர்மனின், ஈழத்தின் முதல் தலைமுறைப் பெண் படைப்பாளி பவானி ஆழ்வாப்பிள்ளை (2017), கே.எஸ்.சிவகுமாரின் ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும் (2008), கார்த்திகேசு ருத்ரமூர்த்தியின் யுத்தகால வன்னியின் வாழ்வியல் கோலங்கள் (2019) போன்றவற்றில் பவானி ஆழ்வாப்பிள்ளையின் சிறுகதைப் பொருண்மைகள் பற்றியே அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அவை சமூகவியல் சார்ந்த தனிமனித உணர்வுத் தளத்தில் நோக்கப்படாதது ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. இதன்பொருட்டு பவானி ஆழ்வாப்பிள்ளையின் ‘கடவுளரும் மனிதரும்’ என்கின்ற முதலாவது சிறுகதைத் தொகுப்பிலுள்ள மன்னிப்பாரா, சந்திப்பு, பிரார்த்தனை, அன்பின் விலை முதலான கதைகள் சமூகவியல் அணுகுமுறையில் விபரிப்பு மற்றும் விளக்க ஆய்வு முறைகளினூடாக ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவாக பெண் படைப்பாளியான பவானி ஆழ்வாப்பிள்ளையின் சிறுகதைகளில் பேசப்பட்ட சமூக நடைமுறைகள், சமூகம் பற்றிய பதிவுகள், சமூக மாற்றங்கள், பண்பாட்டு நீட்சிகள் என்பன தனிமனித உணர்வுடன் எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பன தெளிவாகக் கண்டறியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** சமூகவியல், பண்பாட்டு நீட்சி, பெண்ணியம்.

# மு.தயாளன் நாவல்கள் காட்டும் ஈழத்து யுத்த கால வாழ்வியல் சூழல்

**Mahendran Kovarththana**
Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
tharshkishania@gmail.com
**Nadira Mariyasandanam**
Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
nadiraeusl@yahoo.co.in

## ஆய்வுச் சுருக்கம்

ஈழத்தில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டம் காரணமாக அனேகமானோர் தங்களது சொந்த மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்து சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் இலக்கிய ஆர்வம் உடையவர்கள் பலர் ஆக்கங்களைப் படைத்து இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளனர். இத்தகையோர் வரிசையில் மு.தயாளனும் ஒருவராக விளங்குகிறார். 1952ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கரவெட்டியில் பிறந்த மு.தயாளன் ஈழத்தில் இடம்பெற்ற இனப் போர் காரணமாக 1984ஆம் ஆண்டு லண்டனுக்குப் புலம்பெயர்ந்தார். இலக்கியத்தில் நாட்டம் கொண்ட மு.தயாளன் நாவல், குறுநாவல், சிறுகதை, கவிதை எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்ட இலக்கியங்களைப் படைத்து ஈழத்து மற்றும் புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்றி உள்ளார். அவரது படைப்புகளில் நாவல்களை அடிப்படையாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அவரது நாவல்கள் ஈழ மண்ணில் இடம்பெற்ற யுத்தத்தினால் மக்கள் உயிரிழந்தமை, அவர்களது உடைமைகள் எரிக்கப்பட்டமை, தங்களுடைய சொந்த நிலத்தினைப் பிரிந்து வேறு தேசத்தில் தஞ்சம் புகுந்தமை போன்ற நிகழ்வுகளைப் பேசுகின்றன. இவ் ஆய்வு பகுப்பாய்வு மற்றும் விபரண ஆய்வு அணுகுமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** தயாளன், புலம்பெயர் இலக்கியம், யுத்தம், ஈழம்.

# தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு

**Alagaraj Abdha Nishan**
Department of Tamil Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
abdhannishan991@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

1960களுக்குப் பின் ஈழத்து இலக்கியப் பரப்பில் அறியப்பட்ட மலையகப் படைப்பாளிகளில் முக்கியமான ஒருவராக தெளிவத்தை ஜோசப் விளங்குகிறார். தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளில் அவரது சிறுகதைகளுக்குத் தனியானதொரு இடமுண்டு. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்ட இவ் ஆய்வானது, தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகளில் மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் - ஓர் ஆய்வு எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவரது சிறுகதைகளை மையமாக வைத்துப் பல ஆய்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. எனினும், அவை மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் குறித்து ஆழமாக ஆய்வு செய்யவில்லை. இந்நிலையில், ஜோசப்பின் சிறுகதைகள் வெளிப்படுத்தும் மலையக மக்கள் வாழ்வியல் அம்சங்களை இவ்வாய்வு வெளிக்கொணர முயல்கிறது. இவ்வாய்வானது விமர்சன அணுகுமுறை, விளக்கமுறை அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகிய ஆய்வு முறையியல்களைக் கைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தெளிவத்தை ஜோசப்பின் சிறுகதைகள் முதலாம் நிலைத்தரவுகளாகவும் இவருடைய சிறுகதைகள் பற்றி வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என்பனவும் மலையகச் சிறுகதை வரலாறு குறித்து வெளிவந்த ஆய்வுகள், விமர்சனங்கள் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** மலையகத் தோட்டப்புற மக்கள், கவ்வாத்து, லயம், கணக்கப்பிள்ளை, தோட்டத்துரை.

# சிறுவர் உரிமை விழிப்புணர்வில் இலக்கியங்களின் பங்களிப்பு : 'எனக்கு வயது பதின்மூன்று' சிறுகதையை முன்னிறுத்திய பார்வை

**K.Lohageetha**
Lecturer, Department of Tamil Language, National Institute of Education, Sri Lanka.
klgeeth@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் அவை எழுதப்படும் காலத்தின் தேவை கருதியவையாயிருப்பதோடு மனித வாழ்வியலை வளம்படுத்துபவையாக, வாசகனுக்கு வழிகாட்டுபவையாக இருத்தல் வேண்டும். சமூகத்திடம் கொண்டுசேர்க்க வேண்டும் என்ற எழுத்தாளனின் எதிர்பார்ப்பு, வாசகனின் மனதில் ஆழப்பதியக்கூடியதாக அமையவேண்டும் என்ற ஆவல் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாக்கமாக வெளிவருகிறது. நவீன இலக்கியப் படைப்புகளான சிறுகதை, கவிதை, நாவல் போன்ற படைப்புகள் சமூகத்திற்குத் தேவையான ஆரோக்கியமான பல விடயங்களைக் கொண்டுசேர்க்கும் ஊடகங்களாக விளங்குகின்றன. சாதாரண கல்வி அறிவுடைய மக்களும் பயின்று நயந்து, பின்பற்றக்கூடிய தன்மையில் எழுதப்படுவதே நவீன இலக்கியங்களின் பிரதான பண்பு. அவ்வாறு எழுதப்படும் இலக்கியங்களே சமூகத்தில் ஆரோக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தனவாகும். இப்பின்னணியில் மனித வாழ்வின் முக்கிய பராயமாகிய சிறுவர் பராயத்தில் அவர்களுக்கெனத் தனித்து உருவாக்கப்பட்ட சிறுவர் உரிமைகள் தொடர்பாக படைப்பிலக்கியங்கள் பல கவனத்திற் கொண்டுள்ளன. அவ்வகையில், எழுத்தாளர் ஸம்ஸ் குறிப்பிடத்தகவர். தனியே பொழுதுபோக்கு அம்சமாக மட்டும் சிறுகதைகளை எழுதாது, தனது படைப்பூடாக மக்களிடத்தில் எத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம் என்பதில் பொறுப்பு வாய்ந்த ஒரு சமூகப் போராளியாகவும் விளங்கியுள்ளார். விழிப்புணர்வுக் கருத்துக்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ வாசகரிடத்தில் கொண்டு சேர்ப்பதில் எழுத்தாளர் ஸம்ஸ் வெற்றிபெற்றிருப்பதை அவர் எழுதிய எனக்கு வயது பதின்மூன்று என்ற சிறுகதை புலப்படுத்தி நிற்கிறது.

**திறவுச் சொற்கள் :** சிறுவர், உரிமை, விழிப்புணர்வு, எனக்கு வயது பதின்மூன்று.

# சடங்காற்றுகையில் சுவை, நறுமணம் மற்றும் தொடுதலின் வகிபங்கு: மட்டக்களப்பு மாவட்டத்தினை மையமாகக் கொண்ட ஆய்வு

**K.Atputhan**
Visiting Lecturer, Department of Fine Arts, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
atputhan1902@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய சூழலில் பாரம்பரிய சடங்குகள் பண்பாட்டின் வெளிப்பாடாகவும் அதன் மீட்சியாகவும் காணப்படுகின்றன. மட்டக்களப்பில் ஆண்டுதோறும் வழிபாட்டி னூடாக நிகழ்த்தப்படுகின்ற சடங்குகள் தன்னகத்தே பண்பாட்டு அம்சங்களான நம்பிக்கை, கலை, நெறிமுறை, பழக்கவழக்கங்கள், அறிவு, மனப்பான்மை, ஒலி, ஒளி, பொருட்கள், காண்பியங்கள், அமைப்புக்கள், உணவுமுறை, அழகியல் போன்ற பலவற்றினைக் கொண்டுள்ளன. இவற்றுள் சுவை, மணம் மற்றும் தொடுதலின் பங்கு மிக முக்கியமானதாகவும் தனித்துவமானதாகவும் காணப்படுகின்றது. இவ்வாய்வானது மட்டக்களப்பின் சடங்காற்றுகைகளில் சுவை, மணம், தொடுதல் ஆகியவற்றின் வகிபங்கு மற்றும் அதன் அணுகுமுறைகளை ஆய்வு செய்கிறது. சடங்காற்றுகையில் நிகழ்த்துவோர், பார்ப்போர், காண்பியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றபோதிலும் சுவை, மணம் மற்றும் தொடுதல் போன்ற உணர்வுரீதியான அம்சங்கள் ஆற்றுகைகளுக்கு வலுச்சேர்ப்பது மாத்திரமின்றி, சடங்கு வெளியில் தனித்துவமான அனுபவத்தினையும் ஏற்படுத்துகின்றன. இவ்வாய்வு சுவை, மணம் மற்றும் தொடுதல் போன்ற அம்சங்கள் சடங்கு வெளி, சாமியாடுபவர்கள், பக்தர்கள், பங்குகொள்வோர், சடங்குப் பாடல்கள், மந்திரங்கள், வர்ணக்கலவைகள், ஒலி, காண்பியங்கள் போன்றவற்றில் எவ்வாறு தாக்கம் செலுத்துத்து கின்றன என்பதனை ஆய்வு செய்கிறது. இவ்வாய்வின் முதலாம் நிலைத்தரவு மூலங்களாக பங்குபற்றல், அவதானம், நேர்காணல் என்பனவும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக இணையம், சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் என்பனவும் விளங்குகின்றன.

**திறவுச் சொற்கள் :** சடங்கு, வெளி, சுவை, நறுமணம், தொடுகை.

# குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நாடகங்களில் இலக்கியச் செல்வாக்கு

**Suthakaran Suvistan**
Postgraduate student, University of Peradeniya.
suthakaransuvistan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

ஆற்றுகை வடிவமாகவும் இலக்கியப் பிரதியாகவும் விளங்கும் நாடகம், பிற இலக்கிய வகைமைகளின் கூறுகளையும் உள்வாங்கி வளம்பெற்றுள்ளது. ஆற்றுகைக்கென ஆக்கப்படும் நாடகங்களிலும் வாசிப்புக்கென ஆக்கப்படும் இலக்கிய நாடகங்களிலும் பிற பிரதித் தொடர்புகள் மிகுந்துள்ளன. செவ்வியல் மரபிலும் வாய்மொழி மரபிலும் நிலைபெற்றுள்ள தொன்மங்கள், இலக்கியச் செய்திகள், இலக்கியப் பாத்திரங்கள் முதலானவை நாடகங்களாக்கப்பட்டுள்ளதுடன் நாடக உத்திகளுள் ஒன்றாக நாடகங் களுக்குள் தொன்மச் செய்திகள், இலக்கியத் தகவல்கள் முதலானவற்றை இணைத்தலும் இடம்பெறுகின்றன. ஆற்றல்மிக்க நாடக ஆசிரியர்கள் பிற இலக்கிய வளத்தின் கூறுகளைத் தம் நாடகங்களில் வெற்றிகரமாகக் கையாண்டு, நாடகக்கலையைச் செழுமைப் படுத்தியுள்ளனர். அத்தகைய நாடக ஆளுமைகளுள் குழந்தை ம. சண்முகலிங்கம் முக்கியம் பெற்றவராகத் திகழ்கிறார். அவருடைய நாடகப் பிரதிகளில் வெளிப்படையாகவும் குறியீடுகளாகவும் தொன்மங்களும் இலக்கியச் செய்திகள், இலக்கிய மாந்தர்கள் முதலானவையும் இடம்பெற்றுள்ளன. அவை அவருடைய நாடகங்களின் பொருண்மை வெளிப்பாட்டுக் கருவியாகவும் அழகியல் கூறாகவும் விளங்குகின்றன. அவருடைய நாடகங்கள் குறித்துக் கணிசமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஸ்ரீ. கணேசன் (1997), சோ. பத்மநாதன் (1997), சோமசுந்தரம் (1997), அ.யேசுராசா (1997) பா.மோகனதாஸ் (2016) முதலானோரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. இவர்களது கட்டுரைகளில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடக ஆக்கத்தில் இடம்பெறும் இலக்கியச் செய்திகள் பற்றிய பதிவுகள் உள்ள போதிலும், அந்த இலக்கியச் செய்திகளை அவர் ஏன் கையாண்டுள்ளார், நாடகத்தின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியல் முழுமைக்கும் அவை எத்தகைய பங்கினை வழங்கியுள்ளன முதலானவை விரிவாக ஆராயப்படவில்லை. அவற்றை ஆய்வுப் பிரச்சினைகளாகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் அன்னையிட்ட தீ (1990), எந்தையும் தாயும் (1992), வேள்வித் தீ (1994) ஆகிய நாடகப் பிரதிகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டுள்ள இந்த ஆய்வு, இந்நாடகங்களில் இடம்பெறும் இலக்கியச் செய்திகளையும் அச்செய்திகள் நாடகத்தின் பொருண்மை வெளிப்பாட்டுக்கும் அழகியல் முழுமைக்கும் ஆற்றியுள்ள பங்களிப்பினையும் கண்டறிவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்புசார் ஆய்வாக அமைந்துள்ள இக்கட்டுரை, உள்ளடக்கப் பகுப்பாய்வின்கீழ் விளக்கமுறைத் திறனாய்வு அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** அரங்கு, ஆற்றுகை, இலக்கியச் செய்திகள், பொருண்மை.

# தலித்திய நோக்கில் கந்தன் கருணை

**K.Nilaxsan**
Department of Tamil, Faculty of Arts, University of Peradeniya.
knnilax5@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

அம்பேத்கர் நூற்றாண்டு எழுச்சிக்குப்பின் ஏற்பட்ட எதிர்ப்பு அரசியலின் ஒரு வடிவமாகவே தலித் அரங்கு இந்தியாவில் வளர்ச்சி பெற்றது. தலித் அரங்கானது நாடகச் சூழலிலுள்ள ஏனைய அரங்குகளிலிருந்து மாறுபட்ட தன்மை உடையது. இந்த அரங்கானது இந்தியாவில் வளர்ச்சி பெற்றுப் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியபோதும் இலங்கையில் தலித் அரங்கு என்ற தனித்தொரு தன்மையான வளர்ச்சியில் முனைப்புப் பெறவில்லை. ஆனால், சமூக மாற்றத்திற்கான அரங்கு என்ற தன்மையில் தலித் அரங்களுடனும் ஒத்துப்போகக்கூடிய கூறுகளுடன் அரங்கச் செயற்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது. சமூக மாற்றத்திற்கான அரங்கு பேசும் முக்கிய பொருண்மைகளாக இன விடுதலை, சாதிய விடுதலை, பாலின விடுதலை போன்றன காணப்படுகின்றன. இப்பொருண்மையில் எழுந்த ஈழத்தின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகள் தலித்திய நோக்கில் வெளிவந்தபோதும் ஈழத்தில் நாடகங்கள் கணிசமாக வெளிவரவில்லை. இலங்கையில் மக்களுடைய விடுதலைக் கருத்தியலை அடியொட்டி படைப்பு இலக்கியத் தளத்திலும் விமர்சனத் தளத்திலும் இயங்கிய ஆளுமைகளுள் என்.கே.ரகுநாதன் முக்கியமானவர். இவருடைய கந்தன் கருணை நாடகத்தினை நெல்லியடி அம்பலத்தாடிகள் குழு சார்பில் இளைய பத்மநாதன் காத்தான் கூத்துப் பாணியில் மேடையேற்றினார். கந்தன் கருணையின் எழுத்துரு மற்றும் ஆற்றுகை பற்றிக் க.கைலாசபதி, சி.மௌனகுரு (1992), இளைய பத்மநாதன் (1999), இ.முருகையன் (2002), சி.கா.செந்தில்வேல் (2003) போன்றோர் ஆய்வு மனப்பாங்கில் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இந்த ஆய்வுகளில் பெரும்பான்மையானவை சமூகவியல் நோக்கில் கந்தன் கருணையின் உள்ளடக்கம் குறித்து வெளிவந்துள்ளதே தவிர, தலித்திய நோக்கில் வெளிவரவில்லை. இதனையே ஆய்வு இடைவெளியாக இவ்வாய்வு கொண்டுள்ளது. கந்தன் கருணை குறித்து வெளிவந்த எழுத்துக்களான க.கைலாசபதியின் நாடகத்திற்கு ஓர் அறிமுகம், இளைய பத்மநாதனின் புதுவசந்தம், சி.மௌனகுருவின் பழையதும் புதியதும் போன்றன தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வியல் சார்ந்த கருத்தை வெளிப்படுத்தி இருந்தாலும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலை பிம்பமாக இருக்கின்ற தலித்திய நோக்கில் அவை அணுகவில்லை. எனவே, கந்தன் கருணை நாடகமானது தாழ்த்தப்பட்ட மக்களுக்கான கருத்துகளை எவ்வாறு வெளிப்படுத்தி உள்ளது என்பது இங்கு ஆய்வுப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளது. தலித்திய விமர்சன முறையில் ஆராயப்பட்டுள்ள இந்த ஆய்வு சமூகவியல் அணுகுமுறையின் கீழ் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. கந்தன் கருணை நாடகமானது தலித்திய மக்களின் வாழ்வையும் விடுதலைக்கான கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளதோடு சாதிய விடுதலை மற்றும் பொருளாதார சமத்துவம் ஆகியவையே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான விடுதலையாக அமையும் என்பதை இந்நாடகம் அழுத்தமாக வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** தலித் அரங்கு, கந்தன் கருணை, சாதியம், ஒடுக்கப்பட்ட மக்கள்.

# பட்டிப்பளைப் பிரதேச விவசாயப் பண்பாட்டில் போடிமாரின் வகிபங்கு

**Vijayareththinam Dishani**
Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
Vdishani14@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தற்கால ஆய்வாளர்கள் மத்தியில் பிரதேசங்களின் வரலாற்றை வெளிக்கொண்டு வருவதற்கு அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் வரலாற்றை அடிப்படையானதாகக் கொள்கின்ற கோட்பாடு வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றது. இந்நிலையில், பட்டிப்பளைப் பிரதேசத்தில் வாழ்ந்த போடிமாரினுடைய வரலாற்றினையும் பண்பாடு களையும் ஆழமாக நோக்குவதன் மூலம் அப்பிரதேசத்தினுடைய வரலாற்றை வெளிக்கொண்டுவருவதற்கான முயற்சியாக இவ் ஆய்வு அமைகிறது. எனவேதான், பட்டிப்பளைப் பிரதேசத்தில் வாழ்ந்த போடிமாரின் வரலாறுகளையும் பண்பாடுகளையும் வெளிப்படுத்துவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகிறது. இப்பிரதேசத்தில் போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த போடிமார் அவர்களின் ஆட்சியை எதிர்த்துள்ளார்கள். ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அவர்களிடம் அதிகாரம் பெற்றவர்களான அறுமக்குட்டிப்போடி, கந்தப்போடி, மண்முனைப்போடி, கதிராமப்போடி முதலானோரும் அரசியல் அதிகாரம் பெறாத போடிமார் பலரும் இங்கு வாழ்ந்துள்ளார்கள். பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் குஞ்சிலயாப்போடியார், கதிரமலைப்போடியார், வீரபத்திரப்போடியார், வீமாப்போடியார் முதலான போடிமார் வாழ்ந்துள்ளார்கள். இப்போடிமாரில் பெரும்பாலானவர்கள் அம்பிளாந்துறைக் கிராமத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள். அதேபோன்று அரசடித்தீவு, பண்டாரியாவெளி, மகிழடித்தீவு, முதலைக்குடா போன்ற கிராமங்களிலெல்லாம் இன்றுவரை பெயர் குறிப்பிடக்கூடியளவு சிறப்பாக வாழ்ந்த போடிமாரின் வரலாறுகள் ஆதாரபூர்வமாக இவ்வாய்வில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அதில் அவர்களின் அரசியல் நிர்வாகச் செயற்பாடுகள், சமூகப் பணிகள், பொருளாதார நடவடிக்கைகள், சமய ரீதியில் அவர்கள் அக்கறை யுடன் செயற்பட்டு ஆலயங்களை அமைத்ததுடன் பண்பாட்டு விருத்திக்கு அவர்கள் ஆற்றிய பணிகள் என்பனவும் போடிமாரது வாழ்வியலுடன் இணைந்திருந்த அவர்களது விவசாயப் பண்பாடு, கலைப் பண்பாடு, உணவு முறைகள், ஆடை அணிகலன்கள் போன்ற பண்பாட்டம்சங்களும் ஆய்வுசெய்யப் பட்டுளன. அவை வரலாற்றுத் தகவல்கள், இலக்கிய மற்றும் தொல்லியல் ஆதாரங்களூடாக உறுதிப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** போடிமார், பண்பாடு, கண்டம், குலவிருது, பட்டி.

# மட்டக்களப்பு கரைவாகுப்பற்று வன்னியர்களும் சமூகமும்

**Rasanayakam Hariskanth**
Department of History, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
Hariskanth488@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இடைக்கால மட்டக்களப்பு வரலாற்றில் கரைவாகுப்பற்று வன்னியர்களுக்கு முக்கிய பங்குண்டு. இவர்கள் மட்டக்களப்பு அரசியல் முறைகளிலும் சமூக வழமைகளிலும் பெற்றிருந்த முக்கியத்துவம், அது சார்ந்து அவர்களது அதிகாரத்தினுடைய தன்மை எவ்வாறு இருந்துள்ளது என்பதனைக் கண்டறிவது இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது கரைவாகுப்பற்று வன்னிச் சிற்றரசர்கள் தொடர்பாகக் கிடைக்கின்ற ஆவணங்கள், நேர்காணல்கள் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ஆய்வு அணுகுமுறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மத்திய கால மட்டக்களப்பிலே கரைவாகுப்பற்று வன்னிமைகள் அரசியல் முறைகளிலும் சமூக வழமைகளிலும் முதன்மையானதொரு இடத்தினையே பெற்றிருந்தனர். கரைவாகுப்பற்று வன்னிமைகள் மிகுந்த அதிகாரம் கொண்டவர்களாகக் காணப்பட்டபோதிலும் அவர்களது ஆட்சியானது எதேச்சதிகாரமாக இல்லாது வரையறுக்கப்பட்டதாகவே காணப்பட்டுள்ளது. மேலாதிக்கம் செலுத்தக்கூடிய அரசின் (ஐரோப்பியர்கள்) கீழ் கரைவாகுப்பற்று வன்னிமைகள் சில காலம் இருந்தாலும் தங்களது ஆட்சிப் பகுதியில் சுதந்திரமான ஆட்சியினையே செலுத்தியுள்ளனர். மட்டக்களப்பில் காலனித்துவ ஆட்சியின் ஆரம்ப காலகட்டங்களில் கரைவாகுப்பற்று வன்னிமைகள் பெற்றிருந்த ஆட்சிய திகாரத்தில் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தாலும், சமூக வழமைகள் மற்றும் பொருளாதாரரீதியில் வன்னிமைகள் முக்கியத்துவம் பெற்றவர்களாகவே இருந்துள்ளனர். காலப்போக்கில் பிரித்தானியர்களது ஆட்சியிலே வன்னியர்களது அதிகாரங்கள் பறிக்கப்பட்டிருந்தாலும் பின்னர் அவர்களாலேயே கரைவாகுப்பற்றுக்கு வன்னிமைகள் நியமிக்கப்பட்டு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. இவர்கள் நீதிமன்றங்களில் வழக்குகளை விசாரித்துத் தண்டனை வழங்கும் அதிகாரம் உடையவர்களாகவும் ஆலயங்களுக்குத் தலைமை தாங்கி நிர்வாகங்களைத் திறன்பட நடத்துபவர்களாகவும் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்பவர்களாகவும் காணப்பட்டனர். நாடு சுதந்திரம் அடைந்ததை அடுத்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் கரைவாகுப்பற்று வன்னியர்கள் பெற்றிருந்த சமூக ரீதியிலான முக்கியத்துவம் குறைவடைந்தது. குறிப்பாக, சுதந்திரத்தின் பின் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தங்களின்போது ஆலய நிர்வாகத்தின் தலைமைப் பதவிகள் வன்னியர் பரம்பரையைச் சேர்ந்த வேறு குடிகளுக்கு மாற்றிக் கொடுக்கப்பட்டுக் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. தற்காலத்தில் கரைவாகுப்பற்று வன்னியர்கள் ஆலய நிர்வாகங்களில் தலைமைப் பதவியில் இருப்பவர்களாக மாத்திரம் காணப்படுகின்றனர். கரைவாகுப்பற்றுப் பகுதியில் இருந்த வன்னியர்களுடைய ஆட்சி மட்டக்களப்பில் இருந்த அரசுகளில் இருந்து முக்கியத்துவமிக்க ஆட்சியாகக் காணப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** வன்னியர்கள், பற்றுக்கள், மத்திய காலம், கரைவாகு, காலனித்துவம்.

# வன்னிப் பெருநிலப் பரப்பில் தொல்லியல் சின்னங்களில் தமிழர் கலை வெளிப்பாடும் அதன் தாக்கமும்

**Ramakavundar Thevatharshikan**
Department of Visual & Technological arts, Swami Vipulananda Institute of Aesthetic Studies, Eastern university, Sri Lanka.
tharsikantheva97@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள் போன்றவை பல இடங்களில் கண்டெடுக்கப்படுகின்றன. இச்சின்னங்கள் வன்னியின் பழமை வாய்ந்த வரலாற்றினை வெளிப்படுத்துவதோடு, அனுராதபுரம், பொலனறுவை, கண்டி போன்ற பௌத்த மையங்களுடன் தொடர்பற்ற தனித்துவத்தைக் காட்டுகின்றன. சந்திர வட்டக்கற்கள் சில இடங்களில் அலங்கார வேலைப்பாடுகளுடனும் காணப்படுகின்றன. குருந்தூர் மலை, முதலியார் குளம், மருக்காரம்பளை, மன்னாகண்டல் மலை போன்ற இடங்களில் இவை உள்ளன. கைப்பிடி வரிசைகள் அனைத்தும் யானைத் தும்பிக்கை அமைப்பில் காணப்படுவதுடன், கோயில், மாளிகை, அரண்கள் தொடர்பான இடங்களில் உள்ளன. மன்னாகண்டல் மலை, பாண்டியன் குளம், மடுகந்தை, ஆலங்குளம் போன்ற இடங்களில் இவை கண்டெடுக்கப்பட்டுள்ளன. காவற்கற்கள் பெரும்பாலும் நாகர் உருவங்களுடன் காணப்படுகின்றன. சில காவற்கற்கள் அலங்காரமின்றி உள்ளன. இவை இயக்கர்கள், நாகர்கள் வாழ்ந்ததற்கான தடங்களை வெளிக்கொணர்கின்றன. நெளுக்குளம், சின்னத் தம்பனை, சமனங்குளம் போன்ற இடங்களில் இவை காணப்படுகின்றன. இச்சின்னங்கள் பௌத்தமயமாக்கப்பட்டுப் பாதுகாப்பின்றி கைவிடப்பட்டுள்ளன. கிராம மக்கள் இவற்றைச் சிறு தெய்வ வழிபாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர். கைப்பிடி வரிசை, சந்திர வட்டக்கற்கள் ஆகியவை ஆலயங்களிலும் வேறு நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தப்படுகின்றன. இவை பௌத்த கலாசாரத்துடன் ஒத்துப்போகாமல், தென்னிந்திய தமிழ்க் கட்டடக்கலையின் ஒத்துழைப்பைக் காட்டுகின்றன. இருந்தபோதிலும், இத்தொல்லியல் சின்னங்களைப் பௌத்த அடையாளங்களாக விளங்கச்செய்யும் முயற்சிகள் வன்னி நிலப்பரப்பில் அரசால் மேற்கொள்ளப்படுவதைக் கவலைக்குரிய விடயமாகக் கருதலாம்.

**திறவுச் சொற்கள் :** தொல்லியல் சின்னங்கள், சந்திர வட்டக்கற்கள், கைப்பிடி வரிசைகள், காவற்கற்கள்.

# மாணவர்களின் உளவிருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு

**Niththiyanantham Hakshana**
Department of Education and ChildCare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,
nhakshana@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மாணவர்களின் உளத்தைச் சிறந்த முறையில் பேணுவதற்குச் சுற்றறிக்கை இலக்கம் 39/ 2022இன் அடிப்படையில் கல்வி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது 2022.12.12இல் அறிமுகப்படுத்தப் பட்டது. போரதீவுப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்களிடத்தில் உளம் சார்ந்த விருத்தியை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமாக ஏற்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது. எனவே, இவ் ஆய்வுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து மாணவர்களின் உள விருத்தியில் பாடசாலை உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் வகிபங்கு எனும் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வகையில், போரதீவுப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமானது எவ்வாறு முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது, அதனை முன்னெடுத்துச் செல்வதில் எவ்வாறான சவால்கள் காணப்படுகின்றன என்பவற்றைக் கண்டறியும் விதமாக இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இவ் ஆய்விற்கு போரதீவுப்பற்றுக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 50%ஆன பாடசாலைகள் ஒதுக்கீட்டு மாதிரியின் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் பத்துப் பாடசாலைகளில் உள்ள பத்து அதிபர்களும், பத்து ஆலோசனை வழிகாட்டல் ஆசிரியர்களும், ஆலோசனை வழிகாட்டல் ஆலோசகரும், Slovin மாதிரி முறையைப் பயன்படுத்தி 87 மாணவர்களும், 50% ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் 67 ஆசிரியர்களும் மாதிரியாகத் தெரிவுசெய்யப் பட்டனர். இவர்களிடமிருந்து நேர்காணல், குவியக்குழுக் கலந்துரையாடல் மூலமாக பண்புசார் தரவுகளும், வினாக்கொத்து மூலமாக அளவு ரீதியான தரவுகளும் பெறப்பட்டன. பண்புசார் தரவுகளைப் பயன்படுத்தி விபரணப் பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது. அளவுசார் தரவுகள் SPSS இல் உட்செலுத்தப்பட்டு அதன் மூலம் எண்சதவீதம் பெறப்பட்டு Excel இல் சலாகை வரைபுகள் மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் சார்ந்த போதிய விளக்கம் இன்மை, தெளிவின்மை, ஒத்துழைப்புக் குறைவாக காணப்படுகின்றமை என்பன ஆய்வு முடிவுகள் மூலம் கண்டறியப்பட்டதுடன் இந்நிகழ்ச்சித் திட்டத்தைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்வதற்குரிய வழிமுறைகளும் விதப்புரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** பாடசாலை, சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு மாணவர்கள், உள விருத்தி, உள விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம்.

# பாடசாலைக் கல்வியின் பண்புத்தர மேம்பாட்டில் பாடசாலை - சமூகத் தொடர்பு மற்றும் மாணவர் நலன்புரி என்பனவற்றின் செல்வாக்கு

**Saththiyeswaran Supisankari**
Department of Education and ChildCare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka,
ssubi4651@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பாடசாலைக் கல்விப் பண்புத்தரமானது சிறப்பாக அமைய கல்விப் பண்புத்தரச் சுட்டிகளின் மதிப்பெண்கள் உயர்வாகக் காணப்பட வேண்டும். இருப்பினும், மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளின் மதிப்பெண்கள் குறைவாகக் காணப்படுகின்றன. இப்பின்னணியிலே இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டது. மண்முனை தென்மேற்கு கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளில் 50% ஒதுக்கீட்டு மாதிரியூடாக ஐந்து பாடசாலைகளும் அதன் ஐந்து அதிபர்களும் 25 ஆசிரியர்களும் slovin மாதிரித் தெரிவினூடாக 85 சிரேஸ்ட இடைநிலை மாணவர்களும், அம்மாணவர் களின் 85 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. அத்தோடு வலயக்கல்வி அதிகாரிகள் இருவருடனான நேர்காணல், அவதானம் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல் மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகள் யாவும் பயன்படுத்தப் பட்டுள்ளன. பாடசாலைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகள் எந்நிலையில் உள்ளன என அறிதல், பாடசாலை மதிப்பீட்டுச் செயன்முறைகளில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளின் முக்கியத்துவத்தினை இனங்காணல், பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி ஆகிய இரு மதிப்பீட்டுத் துறைகளினை நடைமுறைப்படுத்தும்போது எதிர்நோக்கும் சவால்களினைக் கண்டறிதல், பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்ற இரு மதிப்பீட்டுத் துறைகளை மேம்படுத்தும்போது ஏற்படும் சவால்களினை இழிவளவாக்குவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தல் போன்ற சிறப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்நோக்கங்களை அடையும் பொருட்டு, பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. வினாக்கொத்து மூலமாகப் பெறப்பட்ட தரவுகள் SPSS மென்பொருளின் ஊடாக இடை, இடையம் கணிக்கப்பட்டு MS Excel மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணையாக்கம், சலாகை வரைவுகள் செய்யப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் அடிப்படையில் பாடசாலை - சமூகத்தொடர்பு, மாணவர் நலன்புரி போன்றவை குறைந்த நிலையில் காணப்படல், மாணவர்களுக்கான நலன்புரிச் செயற்பாடுகள் பெயரளவிலே காணப்படல், வளப்பற்றாக்குறை, முறையற்ற மேற்பார்வை என்பவற்றால் அவை சவால்களை அடைவது போன்ற விடயங்கள்

கண்டறியப்பட்டன. இவற்றை இழிவளவாக்கப் பெற்றோர்களின் பூரண ஒத்துழைப்பு, அதிகளவான சமூக விருத்திச் செயற்பாடுகளை உள்வாங்கல், வளங்களை வினைத் திறனாக்குதல், நாளாந்தம் முறையான விதத்தில் தகவல்களை இற்றைப்படுத்தல், பாடசாலை மாணவர் பாதுகாப்புத் தொடர்பான திட்டங்கள் சரியாக நடைமுறைப்படுத்தப் படல், சிறப்பான மேற்பார்வை இடம்பெறல் போன்ற பல்வேறு விதப்புரைகளும் இவ்வாய்வில் வழங்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** கல்விப் பண்புத்தரம், சிரேஸ்ட இடைநிலை மாணவர்கள், பண்புத்தரச் சுட்டிகள், பாடசாலை.

# பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில்சார் தீய்வைத் தூண்டும் காரணிகள்: யாழ்ப்பாண மாவட்டத்தில் இடைநிலைப் பாடசாலைகளின் மீதான ஒரு தோற்றப்பாட்டியல் ஆய்வு

**Brintha Somalojan[1]**
Graduate student of M.Phil. in Education, Faculty of Graduate Studies, University of Jaffna.
brinthas123@gmail.com
**V.Vijayabaskar[2]**
Senior Lecturer, Department of Education, Faculty of Arts, University of Jaffna.
vvbaskar@univ.jfn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

தொழில்சார் மன அழுத்தம் சில நேரங்களில் பயனுள்ள, அவசியமான உள, உடலியல் பிரதிபலிப்பாக இருந்தாலும், அதிக அளவிலான தொழில்சார் மன அழுத்தத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுதல் தொழில்சார் தீய்வைத் தூண்டக்கூடும். தொழில்சார் தீய்வு என்பது மனவெழுச்சிச் சோர்வு, தொழில்சார் தன்வயமிழத்தல் மற்றும் குறைந்த தொழில்சார் சுயநிறைவு ஆகிய பண்புகளால் வகைப்படுத்தப்படும் ஓர் எதிர்மறை உளச் சமூகத் தோற்றப்பாடாகும். கடுமையான பணிநிலைச் சவால்கள் ஆசிரியர்களிடையே பல்வேறு உளவியற் தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை பொருத்தமானவகையில் கையாளப்படாதவிடத்து தொழில்சார் தீய்தலுக்கு வழிவகுக்கக் கூடியனவாகும். யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பரதநாட்டிய ஆசிரியர்களில் தொழில் வாண்மைத்தீய்வு எந்தமட்டத்தில் உள்ளது என்பதையும் தொழில்சார் தீய்வில் தாக்கம் செலுத்தும் காரணிகளை இனங்காண்பதனையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதனையும் ஆராய்வதை அடிப்படையாகக்கொண்டு தோற்றப்பாட்டியல் ஆய்வு அணுகுமுறைக்கூடாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இருபத்தாறு ஆசிரியர் களுடன் அரைக் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் நடத்தப்பட்டன. கருப்பொருட் பகுப்பாய்வின் மூலமாக ஆய்வுத் தோற்றப்பாடு, அதன் வியாபகம் பற்றிய கண்டறிதலைப் பெற்று, அதனூடாக பங்குபற்றுநர்களின் வாழ்தேறிய அனுபவங்களைக் கொண்டு (lived experiences) தொழிற்தீய்வு பற்றிய தோற்றப்பாட்டின் வியாக்கியானம் முன்வைக்கப்படுகிறது. பரதநாட்டியம் கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில் திருப்திநிலை குறைவாகவுள்ளது. மனவெழுச்சிச் சோர்வு, தொழில்சார் தன்வயமிழத்தல் மற்றும் தொழில்சார் சுயநிறைவு மிகக் குறைவாக இருப்பது ஆசிரியர்களில் தொழில் வாண்மைத்தீய்வு அவதானிக்கக்கூடிய மட்டத்தில் உள்ளமைமையை வெளிப்படுத்துகிறது. ஆசிரியர்களின் தனிப்பட்ட உள்ளார்ந்த பண்புகள், பாடசாலைச் சூழமைவு, வகுப்பறை, மாணவர் தரப்புப் பண்புகள் என்பன சவாலான தொழில்சார் மன அழுத்தத்திற்குத் தொடர்ச்சியாக உட்படுத்தக்கூடிய சூழலைத் தோற்றுவிக்கின்றன.

**திறவுச் சொற்கள்:** தொழில்சார் தீய்வு, தொழில்சார் மன அழுத்தம், மனவெழுச்சிச் சோர்வு, சுயநிறைவு.

# கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்கள்

**Shanmugam Jeyanthiny [1], Rajendran Thakshaayini [2]**
Department of Education and Childcare [1,2]
Faculty of Arts and culture [1,2]
Eastern University, Sri Lanka [1,2]
vithujeyanthi4@gmail.com [1]
thakshaayinir@esn.ac.lk [2]

## ஆய்வுச் சுருக்கம்

STEAM கல்வித் திட்டத்தின் ஊடாக பாடசாலைகளில் ஒன்றிணைந்த கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் மாணவர்களது திறன்களை வளர்ச்சியடையச் செய்வதில் அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கியமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா கல்வி வலயத்திலுள்ள 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு STEAM கல்வித் திட்டத்திற்கமைய ஒன்றிணைந்த கல்வியினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள சவால்களையும் அவற்றைத் தீர்ப்பதற்காக பாடசாலைகள் மேற்கொள்ளக்கூடிய செயற் பாடுகளையும் கண்டறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக கல்குடா கல்வி வலயத்தில் காணப்படும் 09 1AB பாடசாலைகளுள் க.பொ.த. உயர்தரத்தில் அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய 06 பாடசாலைகள் ஆய்விற்காகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன. இதற்கமைய தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் 06 அதிபர்களும், உயர்தரத்திற்குக் கற்பிக்கும் ஆசிரியர்கள் 129 பேரும் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 50 சதவீத அடிப்படையில் எளிய இலகு எழுமாற்று முறையில் 68 ஆசிரியர்களும், க.பொ.த. உயர்தர மாணவர்கள் 1262 பேரும் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்யப்பட்டு, 10 சதவீத அடிப்படையில் எளிய இலகு எழுமாற்று முறையில் 132 மாணவர்களும், பிரதிக் கல்விப் பணிப்பாளரும் மாதிரிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். ஆய்விற்கான தரவுகளைச் சேகரிப்பதற்காக அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வினாக்கொத்துப் பயன்படுத்தப்பட்டது. அதேவேளை பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கு நேர்காணல் முறையும் பயன்படுத்தப் பட்டது. பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் SPSS மென்பொருள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு இடை கணிக்கப்பட்டதுடன் பெறப்பட்ட முடிவுகள் Microsoft Excel மூலம் அட்டவணைகள் மற்றும் சலாகை வரைபுகளினூடாக விபரணப்படுத்தப்பட்டு, இலக்கிய மீளாய்வுகளுடன் தொடர்புபடுத்தி வியாக்கியானம் செய்யப்பட்டு, முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் STEAM கல்வித் திட்டத்திற்கமைய கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவது குறைவாகவே காணப்படுகிறது. STEAM கல்வித் திட்டம் தொடர்பாக ஆசிரியர்கள், அதிபர்களுக்குப் போதியளவு விளக்கமின்மை, STEAM கல்வித் திட்டத்திற்கமைய

அதிபர், ஆசிரியர்களுக்குப் பயிற்சியின்மை போன்ற பிரச்சினைகள் ஆய்வு முடிவுகளாகப் பெறப்பட்டுள்ளன. இதனடிப்படையில் STEAM கல்வித் திட்டம் தொடர்பான கருத்தரங்குகளைப் பாடசாலைகளில் மேற்கொள்ளல், ஒன்றிணைந்த கற்பித்தலை மேற்கொள்ளத்தக்க வகையில் பயிற்சிகளை வழங்குதல் போன்றன விதப்புரைகளாக முன்மொழியப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** STEAM கல்வித் திட்டம், ஒன்றிணைந்த கல்வி, தொழிநுட்பம்.

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் வகிபங்கு

**K. Shayanthini [1], R.Thakshaayini [2]**

Department of Education and Childcare [1, 2],

Faculty of Arts and Culture [1, 2],

Eastern University, Sri Lanka [1, 2].

shayanthinik15@gmail.com [1]

thakshaayinir@esn.ac.lk [2]

## ஆய்வுச் சுருக்கம்

சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலானது தனியாளின் வெற்றிகரமான கற்றலுக்கு உதவுகின்றது. கல்வி பெறுவதில் பாடசாலையும் ஆசிரியர்களும் எந்தளவில் முக்கியமோ அதுபோல மாணவர்களின் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலும் முக்கியமானதாகும். எனவே, க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தில் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலினை மேம்படுத்துதல் அவசியமானதாகும். இருப்பினும், கல்முனை கல்வி வலயத்தில் உள்ள கல்முனை தமிழ்க் கல்விக் கோட்டத்தில் காணப்படும் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடச் சித்தியின்மை அதிகரித்துச் செல்கின்றது. இதில் தாக்கம் செலுத்தும் பல்வேறு காரணங்களுள் சுய-ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் குறைவாக இருப்பதும் ஒன்றாகும். இதனால் க.பொ.த. சாதாரண தர மாணவர்களின் ஆங்கிலப் பாடத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல் நிலைமையினைக் கண்டறிந்து அதில் ஆசியர்களின் வகிபாகத்தினை அறியும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக கல்முனை தமிழ்க் கல்விக் கோட்டத்தில் உள்ள க.பொ.த. சாதாரண தரத்தைக் கொண்ட 1AB பாடசாலைகள் இரண்டும் 1C பாடசாலைகள் ஐந்தும் என மொத்தமாக ஏழு பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டன. மாதிரிகளாக ஏழு அதிபர்களும் 25 ஆங்கிலப் பாட ஆசிரியர்களும், ஆங்கிலப் பாட ஆசிரிய ஆலோசகரும், க.பொ.த. சாதாரண தர வகுப்பிலுள்ள 560 மாணவர்கள் ஆண் - பெண் எனப் படையாக்கம் செய்து Slovin (Margin of error 0.09) மாதிரித் தெரிவின் அடிப்படையில் 102 மாணவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். தரவு சேகரித்தல் கருவிகளான வினாக்கொத்து, நேர்காணல் மூலமாக மாதிரியாக தெரிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து அளவு மற்றும் பண்பு ரீதியாக தரவுகள் பெறப்பட்டுள்ளன. அளவு ரீதியான பகுப்பாய்வில் தரவுகள் SPSS (Version 23) மென்பொருள் மூலம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு இடை கணிக்கப்பட்டு Microsoft Excel மூலம் அட்டவணைகள், சலாகை வரைபுகள் உருவாக்கப்பட்டு தரவுகள் வியாக்கியானம் செய்யப்பட்டு பல்வேறு முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் ஆசிரியர்கள் க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகள் மற்றும் வகுப்புக்களை நடத்துவது குறைவு, கற்பித்தலில் நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல்

ஆசிரியர்களுக்குக் குறைவு, மாணவர்களின் பயிற்சிகளை முடிக்க, சந்தேகங்களைப் கேட்கப் போதிய நேரம் ஒதுக்காமை போன்ற முடிவுகளும் வலயக்கல்வி அலுவலகத்தில் சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றலுத்திகள் தொடர்பாக ஆசிரியர்களுக்குப் பயிற்சியினை வழங்குதல், ஆங்கிலப் பாடத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல், பாடசாலை நூலகத்தில் ஆங்கிலப் பாடப் பயிற்சிப் புத்தகங்களைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** சுய ஒழுங்குபடுத்தப்பட்ட கற்றல், க.பொ.த. சாதாரண தரம், ஆங்கிலப் பாடம், மாணவர்கள், ஆசிரியர்களின் வகிபங்கு.

# சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்களின் தாக்கம் - விமர்சனக் கோட்பாட்டு மெய்யியல் நோக்கு

**Parameswaran Kunalini**

Department of Philosophy and Value Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

kunalini330@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

கிரேக்க காலம் தொடக்கம் சமகாலம் வரை கல்வி தொடர்பான பல்வேறு கருத்துக்களை மெய்யியல் ரீதியாக மெய்யியல் சிந்தனையாளர்கள் கூறியுள்ளனர். பிளேட்டோ, ரூசோ, கார்ள்றோஜர்ஸ், ரெயிலர், புறூனர், ஸ்கின்னர், ஜீன் பியாஜே, சிக்மன் பிறைட் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கார்ள்மாக்ஸ் குறிப்பிடும் முதலாளித்துவ சமூகத்தில் எவ்வாறு பொருட்களும் சேவைகளும் வசதிபடைத்தவர்களுக்குரிய உடைமையாக அனைத்தும் மாறுமோ அவ்வாறான ஒரு போக்கினைச் சமூகத்தில் தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில் ஏழைகளின் கல்வியின் நிலையானது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பின்நவீனத்துவ காலச் சிந்தனையாளரான அடோர்னோவின் தற்போதுள்ள முதலாளித்துவ சமூகமானது பரிமாற்ற சமூகமாகும் எனக் கூறுகின்றார். மார்க்ஸின் காலத்தில் இருந்ததைவிட இங்கு அதிக சுரண்டல் தன்மை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இதனை ஒத்த வகையிலேயே சமகாலத்தில் மாணவர்களின் கல்வியானது வியாபாரமாகவே மாறிவிட்டது. அவ்வாறான ஒரு நிலைக்குச் சான்றாக தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைக்குச் சமமாக இயங்கி வருவது விளங்குகிறது. இவ் ஆய்வானது சமகாலத்தில் மாணவர்களின் கல்வியில் தனியார் வகுப்புக்கள் எத்தகைய தாக்கத்தினைக் கொண்டுள்ளன என்பதனை மெய்யியலாளர்களின் கல்வி தொடர்பான கருத்துக்களின் அடிப்படையிலும் அக்கருத்துக்களைச் சமகால நடைமுறையில் ஒப்பிட்டும் விமர்சன ரீதியில் ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. தனியார் வகுப்புக்களினால் ஏற்படும் சமூக, கலாசார, உளவியல், ஒழுக்கவியல், பொருளாதார ரீதியான பிரச்சினைகளை அடையாளங்காண்பதனையும் மற்றும் தனியார் வகுப்புக்களின் தாக்கமானது மெய்யியலாளர் களின் கல்விக் கொள்கைகளுடன் எத்தகைய தொடர்புகளைக் கொண்டுள்ளது என்பதனை விமர்சன ரீதியில் கண்டறிவதனையும் இவ்வாய்வு நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ஆய்வின் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நோக்க மாதிரி, வசதி மாதிரி, மையக்குழுமுறை போன்ற ஆய்வுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது பண்புசார் ஆய்வாகக் காணப்படுவதனால் வினாக்கொத்து, விடய ஆய்வு, நேர்காணல் போன்றன முதலாம்நிலைத் தரவு மூலங்களாகவும், நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் போன்றன இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாகவும் பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் பெறப்பட்டன. மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளின் பின்னணியினைக் கொண்டு, அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கண்டுகொள்வதற்காக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் இவ் ஆய்வானது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

**திறவுச் சொற்கள் :** தனியார் கல்வி நிறுவனங்கள், கல்விக் கொள்கைகள், விமர்சன ஆய்வு, மெய்யியலாளர்களின் சிந்தனைகள், தீர்வுகள்.

# ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் பங்களிப்பு

**T. Puviraj [1], R. Thakshaayini [2]**

Department of Education and Childcare, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka [1,2].

puvipuvi288@gmail.com [1]

thakshaayinir@esn.ac.lk [2]

## ஆய்வுச் சுருக்கம்

ஆசிரியர்களிடையே வாண்மைத்துவத் தேவையானது காலத்துக்குக் காலம் மாறிவருகின்ற நிலையில், ஆசிரியர்களிடம் வாண்மைத்துவத்தை அதிகரிக்கும் நோக்குடன் கல்வி அமைச்சினால் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் 2001ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டன. குறித்த நிலையங்களின் பிரதான நோக்கங்களில் ஒன்றான ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்தல் எனும் நோக்கம் முழுமையாக அடையப்படாமை பாரிய பிரச்சினையாகக் காணப்படுகின்றது. இந்நிலையில், ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேர்ச்சிகளை விருத்திசெய்வதில் ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்கள் எவ்வாறான பங்களிப்பினை வழங்குகின்றன என்பதைக் கண்டறியும் நோக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான மாதிரிகளாக ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையங்களின் முகாமையாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், 445 ஆசிரியர்களில் இருந்து நியமப்படுத்தப்பட்ட Slovin மாதிரித் தெரிவின் 8% Error Tolerance (level) அடிப்படையில் 116 ஆசிரியர்கள் மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள 227 பாடசாலை அதிபர்களில் இருந்து 10% ஒதுக்கீட்டு மாதிரி அடிப்படையில் 23 அதிபர்களுடன் மொத்தமாக 145 பேர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இம்மாதிரிகளிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் ஆவணங் களினூடாக அளவுரீதியாகவும் பண்புரீதியாகவும் தரவுகள் பெறப்பட்டன. அவை SPSS மூலம் பகுப்பாய்விற்குட் படுத்தப்பட்டு பரம்பலின் சதவீதம், கூட்டலிடை என்பன கணிக்கப்பட்டதுடன், Microsoft Excel ஊடாக அட்டவணைகள், வரைபுகள் மூலம் குறித்துக்காட்டப்பட்டுக் கலந்துரையாடலும் செய்யப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் ஆசிரியர்களது வாண்மைத்துவத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கேற்ற செயற்பாடுகள் முறையாக மேற்கொள்ளப்படுவது குறைவு ( $\bar{X} = 2.32$), வாண்மைத்துவ விருத்திக்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளின் விளைதிறன் குறைவு ( $\bar{X} = 2.18$) போன்ற முடிவுகள் கிடைக்கப்பெற்றன. இதற்குப் பிரதானமான காரணங்களாக திறன் விருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்குச் சரியான முக்கியத்துவம் வழங்கப்படாமை, வளப்பற்றாக்குறை, பயிற்றப்பட்ட வளவாளர்கள் இன்மை ( $\bar{X} = 4.16$) போன்றவை கண்டறியப்பட்டன. அத்துடன் ஆசிரியர் வாண்மைத்துவத்தை விருத்தி செய்வதன் அவசியத்தை ஆசிரியர்களுக்கு எடுத்துக்கூறல், குறித்த நிலையங்களின் செயற்பாடுகளை விரிவுபடுத்தல், ஆசிரியர்களுக் கான பயிற்சிகளைச் செயன்முறைப் பயிற்சியினூடாக வழங்குதல், பயிற்றப்பட்ட வளவாளர்களைப் பயன்படுத்தல் போன்ற விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** ஆசிரியர், வாண்மைத்துவம், விருத்தி, ஆசிரியர் வாண்மைத்துவ விருத்தி மத்திய நிலையம்.

# ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு

**Thujenthan Kalaiksa**
Department of Education and Child Care, Faulty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
kalaiksask@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மாணவர்கள் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு உயர்ந்த அடைவைப் பெற, சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் காணப்பட வேண்டும். ஆனால், கோறளைப்பற்று வடக்குப் பிரதேசத்தில் மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் முழுமையான பங்களிப்பு இல்லாமையால் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் கற்றல் நிலை பாதிப்படைகிறது. இந்நிலையில், “ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பு” எனும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வானது கோறளைப்பற்று வடக்கு கல்விக் கோட்டத்திலுள்ள 19 பாடசாலைகளில் இருந்து 50% அடிப்படையில் 10 பாடசாலைகளும், அதிலுள்ள 10 அதிபர்கள், 61 ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களும், Slovin மாதிரித் தெரிவினூடாக ஆண், பெண் என ஒவ்வொரு தரத்திலுள்ள மாணவர்களில் 114 ஆரம்பப் பிரிவு மாணவர்களும், மாணவர்களின் மாதிரித் தெரிவிலிருந்து 59 பெற்றோர் களும், பொதுச்சுகாதார மருத்துவ மாதுக்கள் ஆறு பேரும், சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச்சுகாதாரப் பரிசோதகர், கோட்டக்கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப் பிரதிநிதி ஒவ்வொருவரையும் தெரிவுசெய்து நேர்காணல், அவதானம் மற்றும் குவியக்குழுக் கலந்துரையாடல்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான உணவு வழங்கும் முறை மற்றும் போசாக்கு மட்டங்களினைக் கண்டறிதல், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பை இனங்காணல், ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காணல், பாடசாலை அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இழிவளவாக்கி ஆரோக்கி யமான உணவு வழங்குவதில் பாடசாலை அதிபர்களின் பங்களிப்பினை அதிகரிப்பதற்கான வழிமுறைகளை முன்மொழிதல் ஆகிய சிறப்பு நோக்கங்களுக்கமைவாக இவ்வாய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆய்வு நோக்கங்களை அடையும்பொருட்டுப் பெறப்பட்ட அளவு மற்றும் பண்பு ரீதியான தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுத்தப்பட்டன. SPSS மென்பொருளினூடாக வினாக்கொத்து மூலமாகப் பெற்ற தரவுகளின் இடை, நியமவிலகல் கணிக்கப்பட்டு MS Excel மென்பொருளைப் பயன்படுத்தி அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் செய்யப்பட்டு வியாக்கியானம், கலந்துரையாடல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முடிவுகளும் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வு முடிவுகளின்படி, மாணவர்களுக்கு ஆரோக்கி யமான உணவு வழங்குவதில் பெற்றோர்,

ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் பங்களிப்பும் அதிபர்களின் மேற்பார்வையும் போதியளவாக இன்மையும் சவால்களாக அமைவது கண்டறியப்பட்டுள்ளது. இவற்றை இழிவளவாக்க மாணவர்களுக்கு ஆரோக்கியமான உணவுகளை வழங்க வேண்டும். பெற்றோர், ஆசிரியர் களுக்கு ஆரோக்கிய விழிப்புணர்வுக் கல்வியினை அதிபர்கள் ஏற்படுத்தி மேற்பார்வை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல் வேண்டும் முதலான பல்வேறு விதப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** ஆரம்பப்பிரிவு மாணவர்கள், ஆரோக்கியம், உணவு, பாடசாலை அதிபர்கள்.

# விசேட தேவையுடைய மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரிப்பதில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

## (கல்குடா கல்வி வலயத்தின் கோறளைப்பற்றுக் கோட்டத்திற்குட்பட்ட கனிஷ்ட இடைநிலைப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)

**Abilash.K[1], Arulmoly.S[2]**

[1]BT/KK/Akkuranai Bharathy Vidyalayam

abiabilash716@gmail.com

[2]Retired Professor in Education, Eastern University, Srilanka

chelliah.arulmoly@yahoo.com

### ஆய்வுச் சுருக்கம்

உள்ளடங்கற் கல்வி (IE) என்பது உலகளாவிய ரீதியில் அனைவரும் அடையப் பாடுபட வேண்டிய ஓர் உயர்ந்த இலக்காகும். 1994க்குப் பின்னரான கல்விக் கொள்கைகளுக்கு இணங்க, IE மற்றும் அதனுடன் தொடர்புடைய அணுகுமுறைகளைச் செயற்படுத்துவது வளர்ந்து வரும் இலங்கை போன்ற நாடுகளில் பெரிய சவாலாக உள்ளது. கற்றலில் விசேட தேவையுடையவர்களை (SNE) உள்வாங்கி, தொழில்நுட்ப ரீதியாக புதுமையான கொள்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களின் கற்பித்தலானது மிகவும் முக்கியமானது. இந்த ஆய்வானது குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் கல்குடா வலயத்தில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் சாதாரண மாணவர்களைப் போலவே விசேட தேவையுடைய மாணவர்களது இடர்பாடுகளை அகற்றி வகுப்பறைச் செயற் பாட்டிற்குள் உள்வாங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வியில் நிலைபேறான புதிய தொழில்நுட்பத்தையும் கற்பித்தலையும் வெற்றிகரமாக செயற்படுத்துவது அவசியமாகும். ஆகையால், ஆசிரியர்கள் குடும்பம், பாடசாலை, சமூகம் எனத் தொடர்ந்தாலும் வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியர்களால் வகுப்பறை நுட்பங்கள், கற்பித்தல் முறைகள், கற்பித்தல் சாதனங்கள், கணிப்பீடு, மதிப்பீடு சார்ந்து பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. SNE மாணவர்களது தேவைகளைப் புரிந்துகொள்ளல், கற்பித்தல் சூழலில் ஆசிரியர்கள் அனுபவிக்கும் சவால்களைக் கண்டறிதல், அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனையை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் என்பன இவ்வாய்வில் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன. இது ஆசிரியர்களின் சவால்களை ஆராய்ந்து வகுப்பறைக் கற்பித்தலுக்கு முன்னுரிமை அளிக்கும் ஓர் அளவை நிலை ஆய்வாகும். கல்குடா வலயத்தில் 05 பாடசாலைகள் நோக்க மாதிரி அடிப்படையிலும், எழுமாற்று மாதிரி அடிப்படையில் விசேடதேவை சிறப்புக் கல்விக்கான ஆலோசகர்கள் (ISA) 02 பேரும், 05 அதிபர்களும், 90 ஆசிரியர்களும், 120 மாணவர்களும், 30 பெற்றோர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து தகவல்களைப் பெறும் வகையில் தரவு சேகரித்தல் கருவிகளான வினாக்கொத்து, குழுக் கலந்துரையாடல், நேர்காணல், ஆவணங்கள் ஆகியன பயன்படுத்தப்பட்டன. தெரிவுசெய்யப்பட்ட அனைத்துப் பாடசாலைகளும் அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் மூலமாகப்

பெறப்பட்ட அளவுசார் மற்றும் பண்புசார் தரவுகள் பொருத்தமான SPSS மென்பொருள் முறைகளினூடாக வகைப்படுத்தல், வியாக்கியானம், கலந்துரையாடல் போன்ற செயற்பாடுகளுக்குள் உள்வாங்கப்பட்டன. இருப்பினும், IE நடைமுறைகளை எளிதாக்கும் வகையில் பாடசாலை துணைக் குழுக்கள் உருவாக்கம், வளப்பற்றாக்குறை, பெற்றோரின் ஒத்துழைப்பு, வாண்மைத்துவ விருத்தி, கற்பித்தலுக்கான நேரம், மாணவர் வரவு, விசேட பயிற்சித் திட்டங்கள் தொடர்பான விதப்புரைகளும் இடம்பெறுவதோடு, எதிர் காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளுக்கான ஆலோசனைகளும் ஆய்வாளரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** விசேட கல்வித் தேவைகள், கனிஷ்ட இடைநிலை, அடைவுமட்டம், சவால்கள்.

# நல்லூர் கந்தசுவாமி கோயில் மரபுகளும் மாற்றங்களும்

**Thevaraja Tharsin**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
tharsin999@gmail.com
**K. Mathiseelan**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
mathiseelank@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் சரித்திரப் புகழ் வாய்ந்த இந்துக் கோயில்களுள் ஒன்றாக நல்லூர் கந்தசுவாமி கோயில் விளங்குகின்றது. இவ்வாலயத்தின் மரபுகளையும் அம்மரபுகளில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாற்றங்களையும் மாற்றங்களுக்கான காரணங்களையும் கண்டறிவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றது. ஆய்வுக்கு அளவுசார் தரவுகளும் பண்புசார் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கான இரண்டாம் நிலைத்தரவுகள் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் என்பனவற்றில் இருந்து பெறப்பட்டுள்ளன. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் மரபுசார் விடயங்களில் பாரம்பரியமான நடைமுறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்ற போதிலும், நவீன நாகரிகத்தின் வளர்ச்சியின் காரணமாகவும் பொருளாதார வளர்ச்சி மற்றும் கல்வி வளர்ச்சி போன்றன ஏற்பட்டதன் விளைவாகவும் புதுமைகள் புகுத்தப்பட்டன. இதன் காரணமாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் பாரம்பரிய வழிபாட்டு மரபுகள், தற்கால நவீன நாகரிகத்தின் வளர்ச்சியால் பாரிய மாற்றங்களையும் நன்மைகளையும் உள்வாங்கி யுள்ளது. எனவே, இவற்றைக் கண்டறிவதன் மூலம் தற்கால சந்ததியினருக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் சரியான வழிபாட்டு முறைகளைத் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். அத்தோடு தற்காலத்தில் மாற்றங்கள் ஏற்பட்டமைக்கான காரணங்களையும் கண்டறிய முடியும். இவை எதிர்காலத்தில் மக்கள் மத்தியில் வழிபாட்டு முறைகளையும் நம்பிக்கைகளையும் வலுப்படுத்த உதவும்.

**திறவுச் சொற்கள் :** நல்லூர் கந்தசுவாமி கோயில், மரபு, மாற்றம், பாரம்பரியம்.

# இந்துமதம் வலியுறுத்தும் குடும்பக் கட்டமைப்பு: மகாபாரதத்தை மையப்படுத்திய ஆய்வு

**P.Thaarani**
Temporary Assistant Lecturer, Hindu Civilization, Department of Language,
South Eastern University of SriLanka.
thaaranipancha@gmail.com
**N.Kunasivarupan**
kunasivarupankunasivarupan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

மனித சமூகத்தின் மிகத் தொன்மையான நிறுவனமாகத் திகழ்வது குடும்பமேயாகும். இது எல்லாச் சமூகங்களிலும் எல்லாக் காலங்களிலும் நிலவி வருகிறது. இந்து மதமானது அன்பின் வழியாக சமூக வாழ்க்கையின் அனைத்து விழுமியங்களையும் உலக மக்களுக்குப் போதித்துக் கொண்டே இருக்கின்றது. இந்து மதமானது அன்பு, அறம், அரசியல், வாழ்க்கை நெறிமுறைகள், தத்துவ சிந்தனைகள் போன்ற பல விடயங்களை எடுத்துரைப்பதோடு குடும்பம் பற்றியும் எடுத்துரைத்து அதனை வாழ்வியல் ஊடாக வாழ்ந்து காட்டவும் தவறவில்லை. தனிச்சிறப்புப் பெற்ற இந்துசமய நூல்கள் ஒவ்வொன்றும் இல்லற வாழ்வில் குடும்பக் கட்டமைப்புப் பற்றி எடுத்துரைக்கின்றன. அவ்வகையில், இந்து சமய இதிகாச நூலான மகாபாரதம் குடும்பக் கட்டமைப்பிற்கு முன்னுதாரணமாகத் திகழும் சான்றுகளில் முக்கியமானதாகும். மகாபாரதம் மூலம் ஆண் - பெண் திருமணம் முடித்து இல்லற வாழ்வில் இணையும்போது ஓர் அலகாக குடும்பம் தோற்றம் பெறுகின்றமையையும் குடும்பமாக வாழ்பவர்கள் எவ்வாறு வாழ வேண்டும் என்பதனையும் இந்து சமயமானது போதிக்கிறது. வீரபுருசர்களின் வரலாற்றைக் கூறும் வீர காவியமான மகாபாரதத்தில் குடும்பக் கட்டமைப்பு பற்றிய சிந்தனைகளின் வகிபங்கு எத்தகையது என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாகக் கருதப்படுகிறது. இவ்வாய்வானது மகாபாரதத்தில் கூறப்படுகின்ற குடும்பக் கட்டமைப்பினைத் தெளிவு படுத்துவதனை முதன்மை நோக்கமாகவும் மகாபாரதம் வாயிலாக குடும்பத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்பட்டுள்ள சம உரிமையினைத் தெளிவுபடுத்தல், மகாபாரத்தின் சிறப்பினை அடையாளம் காணுதல் போன்றவற்றைத் துணை நோக்கங்களாகவும் கொண்டுள்ளது. முதல்நிலைத்தரவுகளாக மகாபாரத இதிகாசமும் இரண்டாம் நிலைத்தரவுகளாக மகாபாரதத்துடன் தொடர்புடைய கட்டுரைகள், சஞ்சிகைகள், பத்திரிகைக் குறிப்புக்கள் என்பனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. வீர காவியமான மகாபாரத்தில் இல்லறத்தின் அலகு, கட்டமைப்பான குடும்பம் பற்றிய விடயங்கள் மிகுந்து காணப்பட்டுள்ளமை இவ் ஆய்வின் முடிவாக விளங்குகிறது.

**திறவுச் சொற்கள் :** குடும்பம், மகாபாரதம், இல்லறம், இந்துமதம்.

# இலாவாணை குமாரர் கோயிலின் வழிபாட்டு மரபுகள் - ஓர் ஆய்வு

**T. Shathursana**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

shathusanapvt@gmail.com

**V.Gunapalasingam**

Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

gunapalasingamv@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

இந்து வழிபாட்டு மரபுகளில் ஆகமம் சார்ந்த வழிபாடு, ஆகமம் சாராத வழிபாடு ஆகிய இரு வழிபாட்டு மரபுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதனடிப்படையில் ஆகமம் சாராத வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்ற ஆண் தெய்வங்களில் ஒருவராக குமாரர் விளங்குகிறார். வனத்திற்குக் காவல் தெய்வமான குமாரர் சாதியை அடிப்படையாகக் கொண்டு பழங்குடியின மக்களினால் காட்டுத் தெய்வமாகவும், வேட்டைத் தெய்வமாகவும், தலைத் தெய்வமாகவும் வர்ணிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டு மல்லாமல் பழங்குடியல்லாத சமூக மக்கள் மத்தியிலும் வழிபடப்பட்டு வருகின்றதோடு, தொழில் விருத்தியை நோக்கமாகக் கொண்டும் மக்கள் மத்தியில் இத்தெய்வம் முதன்மை பெறுவதையும் அவதானிக்க முடிகின்றது. கிழக்கு மாகாணத்தில் பழமைமிக்க ஆலயமாகத் திகழும் இலாவாணை குமாரர் ஆலயத்தின் தனித்துவமிக்க வரலாற்றுச் சிறப்பினையும் அதன் சடங்கு முறைகளையும் பழங்குடி மக்களது வழிபாட்டில் குமார தெய்வம் பெறுகின்ற இடத்தினையும் வெளிக்கொண்டு வருவதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகின்றது. ஒவ்வொரு தெய்வத்துக்குமான வழிபாட்டு மரபுகள் வெவ்வேறாகக் காணப்படுவது போன்று குமாரருக்குரிய வழிபாட்டு மரபுகளும் ஏனைய தெய்வ வழிபாட்டு மரபுகளிலிருந்து மேன்மையும் தனிச்சிறப்பும் கொண்டதாக அமைந்துள்ளது. இலாவாணையில் குமார தெய்வ வழிபாடு சிறப்புப் பெறுவதற்குக் காவியப் பாடல்களும் அடிப்படையாக அமைந்துள்ளன. இக்காவியப் பாடல்கள் கோயில் வரலாறு, தெய்வத்தின் வரலாறு, தெய்வத்தின் சிறப்பு, தெய்வத்திற்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு போன்றவற்றை உள்ளடங்கியதாக உள்ளன. இந்த ஆய்வானது விவரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, கள ஆய்வு ஆகிய ஆய்வு முறையியல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்விற்குரிய தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளை உள்ளடக்கியதாக உள்ளன. நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல் என்பன வற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகள் முதலாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. நூல்கள், சாசனங்கள், கட்டுரைகள் என்பனவற்றின் தரவுகள் இரண்டாம் நிலைத்தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. குமாரர் என்பவர் யார் என்பதை வெளிக்கொணர்தல், குமாரர் பற்றிய ஐதிகக் கதைகள், குமாரர் வழிபாட்டு முறைகள், வழிபாட்டின் தனித்துவம் என்பவற்றை வெளிக்கொணர்தல், அவ்வழிபாட்டுச் சடங்கு வாயிலாக மக்களிடையே நிலவும் நம்பிக்கைகளை வெளிப்படுத்தல் என்பனவற்றை இவ்வாய்வு மேற்கொண்டுள்ளது. இதுவரையில் இவ்வாலயம் தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாமல் இருப்பது இவ்வாய்வின் பிரச்சினையாக உள்ளது.

**திறவுச் சொற்கள் :** இலாவாணை, குமார தெய்வம், நாட்டார் வழிபாடு, மரபுகள்.

# மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறைகளும்

**Jayavani Krishnamoorthy**
Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
kirushnamoorthyjayavani@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்ட இந்து சமயத்தில் சடங்குகள் காத்திரமான பங்கு வகிக்கின்றன. உள்ளூர்ச் சமூகங்களின் கடவுள் நம்பிக்கைகளுடன் தொடர்புபடும் இத்தகைய சடங்குகள் இன்றைய காலத்தில் பல்வேறு வகைகளில் முக்கியத்துவம் பெற்றவையாக விளங்குகின்றன. அந்தவகையில், மட்டக்களப்புத் திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமும் அதன் தனித்துவமான வழிபாட்டு முறை களும் எனும் இவ்வாய்வானது, ஏனைய அம்மன் ஆலய சடங்குகளில் இருந்து மாறுபட்ட வழிபாட்டு முறைகளைக் கொண்ட திராய்மடு ஸ்ரீ வீரபத்தினியம்மன் ஆலயத்தை மையப்படுத்தியதாக அமைகின்றது. திராய்மடு பிரதேச மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பத்தினி அம்மன் வழிபாட்டு முறையானது அச்சமூகத்திற்கும் ஆலயத்திற்கும் மிக நெருக்கமான தொடர்பினைக் கொண்டு காணப்படுகிறது. இவ்வாலயத்தின் வழிபாடு பற்றிய முழுமையான விடயங்களை அறிந்துகொள்ள முடியாமை இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு வரலாற்று ஆய்வு, விபரண ஆய்வு முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திராய்மடு ஸ்ரீ வீரபத்தினி அம்மன் ஆலயமானது ஏனைய ஆலயங்களில் இருந்து வழிபாட்டு முறை, தெய்வமாடும் முறைகள், சடங்குகளில் இடம்பெறும் நிகழ்வுகள் என்பனவற்றில் தனித்துவத்தைக் கொண்டு விளங்குகிறது.

**திறவுச் சொற்கள் :** மட்டக்களப்பு, திராய்மடு, பத்தினி, வழிபாடு, வேடுவர்கள்.

# ஒழுக்கக் கோட்பாடு - இந்து, பௌத்த தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**Selvarasa Vijitha**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
vijithasvp@gmail.com
**R. Sahayaseelan**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.
sahayaseelanr@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

ஒழுக்கம் என்னும் எண்ணக்கரு தற்கால உலகில் மிகப் பரந்த அளவில் அநேகர் மத்தியிலும் பேசு பொருளாகத் திகழ்கின்றது. மனித வாழ்விலும் நடைமுறை வாழ்க்கையிலும் ஒழுக்கத்தின் இன்றியமையாமையைக் காண முடிகின்றது. ஒழுக்கம் உடையவரே சமூகத்தாலும் பிறராலும் மதிக்கப்படுபவராக உள்ளார். இவ்வாறாக காணப்படும் ஒழுக்கங்களை மனிதன் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகுவானாக இருந்தால் சமூகம் மேன்மையடையும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பவர்கள் பற்றியும் ஒழுக்கத்தைக் கடைப் பிடிப்பதனால் ஏற்படுகின்ற நன்மைகள் பற்றியும் அனைத்துச் சமயங்களும் தமது கருத்துக்களைக் கூறி நிற்பதனைக் காணலாம். இதே போல் ஒழுக்கத்தை மீறுபவர்கள் அனுபவிக்கின்ற இன்னல்களையும் அதனால் ஏற்படக்கூடிய பாதகங்களையும் அவர்களுக்குச் சமூகத்தில் கொடுக்கப்படுகின்ற நிலைகள் பற்றியும் அதனால் அவர்கள் அடையப் போகும் வாழ்வியல் மாற்றங்கள் பற்றியும் சமயங்கள் பல்வேறு எடுத்துக்காட்டுகளின் வாயிலாக விளக்கிக் கூறுவதனைக் காணலாம். இந்து, பௌத்த சமயங்கள் தத்தம் சமய ஒழுக்கங்கள் ஊடாக எத்தகைய ஒற்றுமைப் பாங்கினைக் கொண்டுள்ளன என்பதனைக் கண்டுகொள்வதே இவ் ஆய்வினுடைய நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக பண்புசார் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தப் பண்புசார் ஆராய்ச்சியானது விபரண ஆய்வாக இருப்பதனால் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளாகவே உள்ளன. நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள் முதலியன ஆய்விற்குரிய தரவு சேகரிப்பு முறைகளாக உள்ளன. மூன்றாம் நிலைத் தரவுகளாக இணையவழித் தரவுத் திரட்டல் முறையின் மூலமும் கிடைக்கப்பெற்ற தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்வானது ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஒழுக்கக் கோட்பாடு, ஒழுக்கம்சார் எண்ணக் கருக்கள், இந்து மற்றும் பௌத்த சமயங்களில் காணப்படுகின்ற ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் என்பன மனிதனது வாழ்வில் மிக உன்னதமான ஒன்றாகத் திகழ்கின்றமை இவ் ஆய்விலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** இந்து சமயம், பௌத்த சமயம், ஒழுக்கம், உபநிடதம், பகவத்கீதை, தம்மபதம்.

# இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்துசமய இலக்கியப் பங்களிப்புகள்

**Thenila Jegatheeswaran**
Department of Hindu Civilization, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.
thenilaj@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

இலங்கையில் இந்து சமயம் நிலைபெற்றுள்ள பிரதேசங்களில் யாழ்ப்பாணம் தனக்கெனத் தனித்துவமான பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டமைந்ததாக விளங்குகிறது. இப்பிரதேச மக்களின் வாழ்க்கை முறைகள், தொழில் முறைகள், பண்பாட்டு முறைகள் போன்றன ஒன்றோடொன்று தொடர்புபட்டு அம்மக்களின் வாழ்வியலோடு இணைந்ததாகக் காணப்படுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பங்களிப்புகள் எனும் தலைப்பில் அமைந்துள்ள இவ்வாய்வானது, இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த யாழ்ப்பாணப் பெண்களையும் அவர்கள் தமது பங்களிப்பினை எவ்வகையில் நல்கினர் என்பதனையும் வெளிக்கொணர்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த யாழ்ப்பாணப் பெண்கள் பலர் காணப்பட்டாலும் அவர்களது பணிகள், சேவைகள் பற்றிய பதிவுகள் ஆவணங்கள் என்பன மிகவும் அரிதாகவே உள்ளமை இவ்வாய்வின் முக்கிய பிரச்சினையாகும். இவ்வாய்வானது விபரண ஆய்வு, வரலாற்று ஆய்வு, பகுப்பாய்வு முறையியல்களினூடாக கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் யாழ்ப்பாணத்தில் நிலவிய இந்துப் பண்பாடனது கந்தபுராண கலாசாரமாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வில் யாழ்ப்பாணப் பெண் ஆளுமைகளின் இந்து சமய இலக்கியப் பணிகளாக இந்து சமய இலக்கியங்களைப் பதிப்பித்தல், கட்டுரைகள் எழுதுதல் என்பன வெளிக் கொணரப்பட்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டு இந்து சமய இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் பங்களிப்பு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி, மேலைநாடுகளிலும் இடம்பெற்றுள்ளமையினையும் இவ்வாய்வு வெளிக்கொணர்கிறது.

**திறவுச் சொற்கள் :** இந்து சமயம், கட்டுரைகள், சைவ இலக்கியங்கள், யாழ்ப்பாணம், பெண்கள்.

# மட்டக்களப்பில் கண்ணகி வழிபாடும் மாதா வழிபாடும் : வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயத்தையும் தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயத்தையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பீட்டாய்வு

**Anthonystaniskilas Amaliny**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
anthonyamalini@gmail.com
**R. Sahayaseelan**
Department of Comparative Religion & Social Harmony, Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka.
sahayaseelanr@esn.ac.lk

## ஆய்வுச் சுருக்கம்

தாய்த் தெய்வ வழிபாட்டு மரபில், இந்து சமயத்தில் கண்ணகி வழிபாடும் கிறிஸ்தவ சமயத்தில் மாதா வழிபாடும் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றன. அந்தவகையில், கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்ணகி அம்மன் வழிபாட்டுத் தலங்களில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றாக வந்தாறுமூலைக் கண்ணகி அம்மன் ஆலயமும் மாதா வழிபாட்டில் பிரசித்தி பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக தாண்டவன்வெளி காணிக்கைமாதா ஆலயமும் காணப்படுகின்றன. இவ்விரு தாய்த் தெய்வ வழிபாடுகளுக்கும் இடையிலான ஒற்றுமைப் போக்கைக் கண்டறிவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவு மற்றும் பண்பு ரீதியிலான தகவல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் இணையத்தளத் தரவுகள் என்பன இவ்வாய்வில் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவ்வாய்வானது விபரண அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் :** வழிபாடு, தாய்த் தெய்வம், சமயம், ஒற்றுமை, பெண்.

# தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் - ஒரு வரலாற்று நோக்கு

**Thanista Sathyendra**
Tutor mentor, CODL, University of Jaffna.
anantharasaathanista@gmail.com


## ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழர் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கினர் என்பதனையும் தனிமனித வாழ்விலும் சமுதாய வாழ்விலும் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து மேன்மை பெற்றிருந்தனர் என்பதனையும் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. சமுதாயத்தில் வாழ்கின்ற மக்களின் ஒருமித்த நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவது பண்பாடு. பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு நிலப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்திற்கும் பண்பாடு உண்டு. நமது பண்பாட்டின் தொன்மையையும் சிறப்பையும் அறிந்துகொள்ளப் பண்பாட்டுப் பாரம்பரிய நடவடிக்கைகள் அவசியமாகின்றன. பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மரபின் வேர்களைத் தேடும் முகமாகப் பின்னோக்கிப் பயணப்படுதல் என்பது இன்றைய காலத்துக்குத் தேவையான ஒன்றாக அமைகின்றது. நாம் அவ்வாறு பயணப் பட்டால் மட்டுமே நம் பழைய மரபின் தொடர்ச்சியையும் நீட்சியையும் அறிந்து கொள்ள முடியும். அதன் அடிப்படையில் காலத்தின் தேவை கருதித் தமிழர் பண்பாட்டு மரபில் விருந்தோம்பல் எனும் தலைப்பில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. தமிழர் பண்பாட்டம்சங்களில் விருந்தோம்பல் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை இலக்கியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதனை எடுத்துக்காட்டுவதனையும் இன்றைய சமூகத்தின் விருந்தோம்பல் சிந்தனைகளை வெளிப்படுத்துவதனையும் நோக்கங்களாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விருந்தோம்பல் என்பது தமிழர் பண்பாட்டிலே முதன்மையான மரபாகும். சமூகமாக வாழும் மக்களினுடைய வாழ்க்கை முறையிலே இத்தகைய மரபுகள் அன்றைய காலத்தில் அவசியமானதாக இருந்தன. ஆனால், இன்றைய காலத்தில் விருந்தோம்பல் மரபு சிறப்புப் பெறுகின்றதா எனக் கேட்டால் மௌனமே பதிலாக அமையும். இவ்வாறான வினாக்களுக்கு விளக்கம் பெறுவதற்கான களமாக அமையும் இவ்வாய்வானது, விபரண ஆய்வு முறையையும் ஒப்பீட்டு ஆய்வு முறையையும் பகுப்பாய்வு முறையையும் பயன்படுத்தி மேற்க்கொள்ளப் பட்டுள்ளது. விருந்தோம்பலின் முக்கியத்துவத்தினை இன்றைய தலைமுறையினருக்கு வெளிப்படுத்துதல் மற்றும் விருந்தோம்பல் மரபினைத் தொடர்ந்தும் பேணுவதற்கான தேவையினை எடுத்துக்காட்டுதல் என்பன இவ்வாய்வின் பெறுபேறுகளாக அமைகின்றன.


**திறவுச் சொற்கள் :** சமூகம், வாழ்க்கைமுறை, பண்பாடு, இலக்கியங்கள், விருந்தோம்பல்.

# பகிடிவதையும் பாலியல் வன்முறையும் : கிழக்குப் பல்கலைக்கழகத்தினை மையமாகக் கொண்ட சமூகவியல் ஆய்வு

**K.Sivavgneshwaralingam Chettiyar**
Department of Social Sciences, Faculty Of Arts & Culture, Eastern University, Sri lanka.
vigneshvaranvignesh615@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பகிடிவதை என்ற அபாயகரமான, அங்கீகரிக்க முடியாத செயற்பாட்டினால் பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வரும் அங்கீகரிக்க முடியாத பல கொடூரமான பகிடிவதைச் சம்பவங்கள் பெறுமதியான பல உயிர்களைக் குடித்துள்ளன. பகிடிவதை எனும் பெயரில் நடைபெறும் பாலியல் துஸ்பிரயோகத்தினால் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். 2022ஆம் ஆண்டு மாத்திரம் பகிடிவதை காரணமாக சுமார் 2000 மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டுள்ளார்கள் என்று தரவுகள் குறிப்பிடுகின்றன. இலங்கையில் பகிடிவதைக்கு எதிராகப் பல சட்டங்கள் அமுலில் உள்ள நிலையிலும் பகிடிவதையைக் குறைக்க முடியாத நிலையை அவதானிக்க முடிகிறது. இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் பாலியல் வன்முறையினைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைகளை இனங்காண்பது இவ் ஆய்வின் நோக்கமாகும். ஆய்வின் நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக நோக்க மாதிரி ஆய்வுக்கான மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கையில் பகிடிவதை தொடர்பாக வெளியிடப்பட்ட ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது பண்புசார் ஆய்வாக அமைந்துள்ளது. அதனடிப்படையில் விடய ஆய்வு, நேர்காணல் போன்றன முதலாம்நிலைத் தரவுகளாகவும், சஞ்சிகைகள், நூல்கள், இணையத்தளத் தரவுகள் போன்றன இரண்டாம் நிலைத்தரவு களாகவும் பயன்படுத்தப்பட்டுத் தரவுகள் பெறப்பட்டன. இத்தரவுகளின் பகுப்பாய்வுகளின் மூலம் இலங்கையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதை மற்றும் பாலியல் துஸ்பிரயோகங்களின் தாக்கங்களின் பின்னணி, மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றினை ஆய்வானது கண்டறிந்துள்ளது. பல்கலைக்கழக வரலாற்றில் ஆண் (70வீதம்) மற்றும் பெண் மாணவர்கள் (40வீதம்) கொடூரமான பகிடிவதை மற்றும் பாலியல் அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்டதனால் இது சமூகப் பிரச்சினையாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இதனை ஒழிக்க வேண்டிய தேவையும் அவசியமாகிறது.

**திறவுச் சொற்கள் :** பாலியல் துஸ்பிரயோகம், வன்முறை, பல்கலைக்கழக மாணவர்கள், தீர்வுகள்.

# உளவளத்துணைச் செயற்பாடுகளும் ஒழுக்கப் பிரயோகங்களும் - ஓர் ஆய்வு

**T.Nimesha**

Department of Philosophy and Value Studies, Faculty of Arts & Culture, Eastern University, Sri Lanka.

nimeshathiyagaraja1@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

தற்கால உலகில் மனிதன் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுள் உளப்பிரச்சினைகள் முக்கியமானவை. இதற்கான ஒரு பிரதான தீர்வாக உளவளத்துணை பிரயோகிக்கப் படுகின்றது. இது மருத்துவமனைகள், நீதிமன்றங்கள், குழந்தை பராமரிப்பு மற்றும் பெண்கள் பாதுகாப்புத் துறைகள், அரசு சாரா நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவன அமைப்புகள் முதலியவற்றால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன் முக்கியத்துவம் காரணமாக இது தவறாகப் பயன்படுத்தப்படுவதும் உண்டு. தகுந்த பயிற்சியின்மை, இதன் முக்கிய அம்சங்களை உணராமை முதலியன இதற்குக் காரணங்களாக அமைகின்றன. ஆற்றுப்படுத்துதல், ஆலோசனை வழிகாட்டல் முதலிய பதங்களாலும் குழப்பகரமாக இது பயன்படுத்தப்படுகின்றது. இச்செயற்பாட்டின்போது ஒழுக்க ரீதியான அம்சங்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்படுதல் வேண்டும். இந்நிலையில், அது எவ்வாறு இடம் பெறுகின்றது, ஒழுக்க நியமங்கள் மீறப்படுகின்றனவா என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டதே இவ்வாய்வாகும். இவ்வாய்வு உளவளத்துணையின் தற்காலப் போக்கை விளக்குதல், உளவளத்துணைச் செயற்பாட்டில் ஒழுக்க விடயங்களின் நிலையை ஆராய்தல், பிரச்சினைகளுக்கான தீர்வை முன்வைத்தல் ஆகிய ஆய்வு நோக்கங்களைக் கொண்டுள்ளது. தகவலறிந்த ஒப்புதல், இரகசியத்தன்மை, கலாசார திறன், சேவைநாடியின் சுயமதிப்பு, தொழில்முறை எல்லைகள், நெறிமுறை முடிவெடுத்தல் மற்றும் மேற்பார்வை, பொறுப்புக் கூறல் முதலிய முக்கிய நெறிமுறை பரிசீலனைகளை இது ஆராய்கிறது. மனித மனங்களின் நிலைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டதால் பண்புசார் ஆய்வு முறை பயன்படுத்தப் படுகின்றது. ஆழ்நிலை நேர்காணல் (In-depth interview) முதலாம்நிலைத் தரவு மூலமாகவும் நூல்கள் மற்றும் ஆய்விதழ் கட்டுரைகள் என்பன இரண்டாம்நிலைத் தரவு மூலங்களாகவும் பயன்படுத்தப்பட்டன. இந்தக் காரணிகளை ஆராய்வதன் மூலம், ஆராய்ச்சி நெறிமுறை நடைமுறைகளின் தற்போதைய நிலை பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. அத்தோடு முன்னேற்றத்திற்கான உத்திகளை முன்மொழிகிறது. பல்வேறு துறைகளில் ஆலோசனை நடவடிக்கைகள் நெறிமுறை, பயனுள்ள மற்றும் சேவைநாடிகளின் உரிமைகளை மதிக்கும் வகையில் நடத்தப்படுவதை உறுதி செய்வதே இறுதி இலக்காகும். இச்சேவை சமூகங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வு மற்றும் நம்பிக்கைக்குப் பங்களிக்கிறது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் மற்றும் பரிந்துரைகள், ஆலோசனைத் தொழிலுக்குள் நெறிமுறைச் சிறப்பின் கலாசாரத்தை வளர்ப்பதில் பயிற்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு வழிகாட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**திறவுச் சொற்கள் :** உளவளத்துணை, ஒழுக்கப் பிரயோகம், சேவைநாடி, உளவளத்துணையாளர்.

# பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தம் : கிழக்குப் பல்கலைக்கழக பெண்கள் விடுதிகளினை அடிப்படையாக் கொண்ட ஆய்வு

**Pranaha Thineswaran**

Lecturer, CASED & Former Assistant Lecturer, Department of Philosophy,University of Jaffna.

npranaha@gmail.com

**Kanthasami Kajavinthan**

Senior Lecturer, Department of Philosophy, University of Jaffna.

Kajavinthan@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

பல்கலைக்கழகமானது தொழில் வாழ்க்கையை வெளியில் கொண்டு செல்வதற்கான அடிப்படைகளை வழங்குகின்ற இடமாகும். பொதுவாக பல்கலைக்கழகங்களில் விடுதிகளில் தங்கி இருந்து கல்வி கற்கும் வெளிமாவட்ட மாணவர்கள் உளப்பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். இவ் உளப்பிரச்சினைகளில் ஒன்றான மன அழுத்தத்தினால் முதலாம் வருடத்தில் புதிதாக நுழையும் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். இம்மன அழுத்தத்திற்கு உள சமூக மற்றும் பொருளாதார காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதனை ஆய்வுப் பிரச்சனையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், விடுதிகளில் தங்கியிருக்கும் முதலாம் வருட மாணவிகளுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தத்தினை இனங்காண்பதனையும் மன அழுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை முகாமைத்துவம் செய்து உள ஆலோசனைகளை வழங்குவதனை நோக்கமாக கொண்டும் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது பல்கலைக் கழகத்தில் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி கற்கும் மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இம்மன அழுத்தத்திற்கு உள சமூக பொருளாதார காரணிகள் செல்வாக்கு செலுத்துகின்றன எனும் இரு கருதுகோள்களை முன்வைத்து மேற்கொள்ளப் பட்டது. ஆய்வுப் பிரதேசமாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வந்தாறுமூலை வளாகத்திற்கு உட்பட்ட பெண்கள் விடுதிகள் தெரிவுசெய்யப்பட்டன. அத்தோடு, கலைப்பீட முதலாம் வருடத்தைச் சேர்ந்த 100 மாணவிகளை மாதிரியாக கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இது ஒரு பண்பியல் சார்ந்த விபரண ஆய்வாகவும் அமைகின்றது. மேலும், ஆய்வுக்கருவியாக மனதால் உணரப்பட்ட மன அழுத்த அளவுகோல் (Percived stress scale) இங்கு பயன்படுத்தப்பட்டதுடன் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்களும் துணைக்கருவிகளாக அமைந்தன. ஆய்விற்காகத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களில் 66% ஆனோர் குறைவான மன அழுத்தத்துடனும் 24% ஆனோர் மிதமான மன அழுத்தத் துடனும் 10% ஆனோர் அதிகமான மன அழுத்தத்துடனும் இருப்பது இனங்காணப்பட்டது. மேலும், ஆய்விற்கு உட்பட்டவர்களில் 53% ஆனோர் உளக் காரணிகளினாலும் 19% ஆனோர் சமூகக் காரணிகளினாலும் 28% ஆனோர் பொருளாதாரக் காரணிகளினாலும்

பாதிக்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டது. எனவே, ஆய்வின் கருதுகோளிற்கு அமைவாக முதலாம் வருட மாணவிகள் மன அழுத்தத்திற்கு உட்படுகின்றார்கள் எனவும் இம்மன அழுத்தங்களுக்கு உள சமூக பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்து கின்றன எனவும் நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் இனங்காண முடிந்தது. மேலும், பெற்றுக்கொள்ளப் பட்ட தரவுகளின் அடிப்படையில் தரவுகள் அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டு கருதுகோள்கள் நிரூபிக் கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளதுடன் மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளுக்கு உள ஆற்றுப்படுத் தல்கள் மற்றும் உள ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் தீவிர மன அழுத்தத்திற்கு உட்பட்டவர்கள் உள ஆற்றுப்படுத்துனரின் மேற்பார்வைக்குக் கொண்டு சேர்க்கப்பட்டார்கள். மேலும், விடுதிசார் உத்தியோகத்தர்கள் மற்றும் பெற்றோருக்கும் ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன. மன அழுத்தத்திற்கு உட்பட்ட மாணவிகளிடம் இருந்து முன்னேற்றகரமான மாற்றங்களை இனங்கண்டு இவ் ஆய்வு முடிவிற்கு கொண்டு வரப்பட்டது.

**திறவுச் சொற்கள் :** உள ஆலோசனைகள், உளப்பிரச்சினைகள், உளக்காரணிகள், பொருளாதாரக் காரணிகள், மாணவிகள்.

# ஜைனம் கூறும் இல்லறம்சார் ஒழுக்கச் சிந்தனைகள் - ஒரு தத்துவவியல் பகுப்பாய்வு

**S. Aneja**
M.phil. Scholar, Department of Philosophy, Faculty of Arts & Culture, South Eastern University of Sri Lanka.
anejaariyarethnam@mail.com

## ஆய்வுச் சுருக்கம்

இந்த ஆய்வானது, ஜைனத்தில் இல்லற வாழ்க்கை மற்றும் ஒழுக்கநெறி மரபுகளுக்கு இடையேயான நெருங்கிய தொடர்பைத் தத்துவ அடிப்படையில் ஆய்வு செய்வதாக அமைகிறது. இந்தியாவின் பழமையான தத்துவ மரபுகளில் ஒன்றான ஜைனம், துறவிகளுக்கும் இல்லறவாசிகளுக்கும் ஆன்மிக விடுதலையை நோக்கிய பயணத்தில் வழிகாட்டும் சிறந்த ஒழுக்கநெறிக் கட்டமைப்பை வழங்குகிறது. அதில் துறவறத்திற்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டாலும், இந்த ஆய்வு உலகியலாக ரீதியாக சாதாரண வாழ்க்கை நடத்தும் இல்லறவாசிகள் (க்ஷராவகர்கள்) பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கப் பொறுப்புகளை வலியுறுத்துகிறது. இவர்கள் அகிம்சா (வன்முறை இன்மை), சத்ய (உண்மை பேசல்) மற்றும் அபரிக்ரஹா (சொத்து குவிப்பு மறுப்பு) போன்ற ஜைனக் கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கின்றனர். மகாவீரர் (24ஆவது தீர்த்தங்கரர்) மற்றும் ஜீனர்கள் (ஆன்மிக வெற்றியாளர்கள்) வழங்கிய போதனைகள், இல்லறவாசிகளின் நெறி உணர்வை வடிவமைக்க முக்கிய பங்காற்றுகின்றன. நவீன சமூகச் சூழ்நிலைகள்சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில், ஜைன நெறியின் தத்துவம் இல்லறப் பொறுப்புகள் மற்றும் ஆன்மிக இலக்குகளை எவ்வாறு சமநிலைப்படுத்துகிறது என்பதை இந்த ஆய்வு விமர்சனப் பார்வையில் ஆராய்கிறது. நூல்கள், கட்டுரைகள் மற்றும் நடைமுறை விளக்கங்கள் மூலம் இந்த ஆய்வு, ஜைன நெறி மரபுகள் எவ்வாறு தனிப்பட்ட ஒழுக்கம், சமூக ஒற்றுமை மற்றும் ஆன்மிக முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைகின்றன என்பதை வலியுறுத்துகிறது.

**திறவுச் சொற்கள் :** ஜைன சமயம், இல்லற வாழ்க்கை, ஒழுக்க மரபு, ஜீனர்கள்.

# PANEL OF REVIEWERS


| | |
|---|---|
| Prof. V. Gunaretnam | Eastern University, Sri Lanka. |
| Prof. T. Krishnamohan | Eastern University, Sri Lanka |
| Prof. V. Inpamohan | Eastern University, Sri Lanka |
| Prof. S.Santhirasegaram | Eastern University, Sri Lanka |
| Prof. Suresh Kanesh | Eastern University, Sri Lanka |
| Prof. (Mrs.) Jeyapraba Suresh | Eastern University, Sri Lanka |
| Prof. S.Muhunthan | University of Jaffna, Sri Lanka |
| Prof. P.M. Hamthoon | Eastern University, Sri Lanka. |
| Prof. MAM. Rameez | South Eastern University of Sri Lanka |
| Prof. (Mrs.) Vigneswary Pavanesan | University of Jaffna |
| Prof. K.T.Ganeshalingam | University of Jaffna |
| Prof. T.Mukunthan | The Open University of Sri Lanka |
| Prof. F.M. Nawastheen | The Open University of Sri Lanka |
| Prof. S. Jeganathan | Eastern University, Sri Lanka |
| Dr. C.Arulmoly (Retired Professor) | Eastern University, Sri Lanka |
| Dr. (Mrs.) S. Kesavan (Retired Professor) | Eastern University, Sri Lanka |
| Dr. M.Nadira | Eastern University, Sri Lanka |
| Dr. R. Premkumar | Eastern University, Sri Lanka |
| Dr. N. Pushparajah | Eastern University, Sri Lanka |
| Dr. M. B. Fowzul | Eastern University, Sri Lanka |
| Dr. Shandru Mariyadas | Eastern University, Sri Lanka |
| Dr. T. Vivanantharasa | Eastern University, Sri Lanka |
| Dr. T.Megarajah | Eastern University, Sri Lanka |
| Dr. AM. Razeek | South Eastern University of Sri Lanka |
| Dr. S. Anuzsiya | South Eastern University of Sri Lanka |
| Dr. K. Gnanaretnam | The Open University of Sri Lanka |
| Dr. T.Selvamanoharan | University of Jaffna |
| Dr. (Mrs.) S. Uthayarasa | University of Jaffna |
| Dr. A.Nithlavarnan | University of Jaffna |
| Dr. N. Piratheeparajah | University of Jaffna |
| Dr. Arularasi Balakrishnan | University of Peradeniya |
| Dr. S. Baskaran | University of Peradeniya |

| | |
|---|---|
| Dr. Ramasamy Ramesh | University of Peradeniya |
| Dr. M.M.Jayaseelan | University of Peradeniya |
| Dr. P. Sarawanakumar | University of Peradeniya |
| Dr. R.Sharwesvara | University of Jaffna |
| Mrs. Ruby Valentina Francis (Retired) | Eastern University, Sri Lanka |
| Mr. M.Ravi | Eastern University, Sri Lanka. |
| Mr. C. Sivanayagam | Eastern University, Sri Lanka |
| Mr. R. Kiruparajah | Eastern University, Sri Lanka |
| Mrs. T Sachithanantham | Eastern University, Sri Lanka |
| Mr. G.Vigneswaran | Eastern University, Sri Lanka |
| Mrs. A. Jeyapratheepa | Eastern University, Sri Lanka |
| Mr. P. Sachithanantham | Eastern University, Sri Lanka |
| Mrs. T.Sathiyajith | Eastern University, Sri Lanka |
| Mr. K. Sathiyasekar | Eastern University, Sri Lanka |
| Mrs. P.Moses | Eastern University, Sri Lanka. |
| Mr. K.Ravichandran | Eastern University, Sri Lanka |
| Mr. K. Mathiseelan | Eastern University, Sri Lanka |
| Mr. S. Chandrakumar | Eastern University, Sri Lanka |
| Mr. A. Yogarajah | Eastern University, Sri Lanka |
| Mrs. T. Rajandran | Eastern University, Sri Lanka |
| Mr. S.K.Shivahaneshan | Eastern University, Sri Lanka |
| Mr. V. Pathmanandakumar | Eastern University, Sri Lanka |
| Mrs. N.Chenthurran | Eastern University, Sri Lanka |
| Mrs. Mekala Sivakumaran | Eastern University, Sri Lanka |
| Mrs. Anne Yalini Satheeswaran | University of Peradeniya |
| Ms. S.Chithra | University of Peradeniya |
| Mr. G. Jeyatheeswaran | University of Peradeniya |
| Mrs. P. Vipulan | University of Jaffna |
| Mr. T.Thileepan | University of Jaffna |
| Mr. S.Ramanarajah | University of Jaffna |
| Mr. S.Sivakanthan | University of Jaffna |
| Mr. K. Nijamir | South Eastern University of Sri Lanka |
| Mr. N. Subaraj | South Eastern University of Sri Lanka |
| Mr. K. Ketheeswaran | The Open University of Sri Lanka |

Sponsored by:
Pamatheesan Kopalapillai,
Partner, Network in Action, Sri Lanka, and
Director, Kopa Foundation.